Registered as a News paper in Ceylon

விலை சதம் 20

"யாராயிருந்தாலும் முழு முயற்சியோடு யோகத்தைப் பயின்றால் சித்தன் ஆகலாம் அவர் சிறியவரோ, முதியவரோ, அன்றித் தொண்டு கிழமோ, நோயாளியோ, பலவீனரோ, எப்படி இருப்பினும் சரி"

[ — ஹடயோகப் பிரதீபிகை.]

யோகக்கலை என்னும் அரிய நூலை விளக்கப் படங்களுடன் 3வது பதிப்பாக வெளியிட்டுள்ளோம்.

10 மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப்

தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

# ஈழநாடு

வார மலர்

மலர் 13 | வைகாசி 3 | ரபி: அவ் 21 | (17—5—71) | திங்கட்கிழமை | இதழ் 94

# பல்கலைக்கழகம் திருத்தி அமைப்பது பற்றி ஆராய குழு

## கல்வி மந்திரி நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

**பல்கலைக்கழகம் திருத்தி அமைப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆறுபேர் கொண்ட குழுவொன்றை கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் நியமித்துள்ளார்.**

பல்கலைக்கழக பாடத்திட்டம் சம்பந்தமாகவும், அரசாங்கத்துக்கும் பல்கலைக்கழகத்துக்குமிடையே இருக்க வேண்டிய தொடர்புபற்றியும் சமர்ப்பிக்கப்பட்ட பல்கலைக்கழக அடிப்படை மசோதா குறித்தும் நியமிக்கப்பட்ட இக்குழு ஆராயும்.

கல்வி அமைச்சரால் நியமிக்கப்பட்ட இக்குழுவின் தலைவராக பேராதனை பல்கலைக்கழக பௌதிகத்துறை விரிவுரையாளர் டாக்டர் ஒஸ்மண்ட் ஜெயரத்தினம் கடமையாற்றுவார்.

குழுவில் அங்கம் வகிக்கும் மற்றவர்கள் வருமாறு:

▪ பேராதனை பல்கலைக்கழக மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர் ஜே. ஜெயசேனா.

▪ பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் டாக்டர் ஷெல்டன் கொடிகார.

▪ வித்தியாலங்கார மருத்துவபீடத்தலைவர் டாக்டர் தஹநாயக்கா.

▪ வித்தியோதயா பல்கலைக்கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர் டாக்டர் ரோஹண்திரா.

▪ கட்டுப்பெத்தை விரிவுரையாளர் பேராசிரியர் உபாலி குருப்பு.

இக்குழுவின் செயலாளராக திரு டிரக் அலுவிகார கடமையாற்றுவார்.

## உள்ளூர்தேர்தலில் தொழிற் கட்சிக்கு அமோக வெற்றி

லண்டன், மே. 16

பிரிட்டனில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களின் பெரும்பாலான தொழிற் கட்சி வெற்றி பெற்றுள்ளது ஆளும் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி ஆதரவில் இருந்த லண்டன் பரோவில் மூன்றில் இரண்டு பங்கு இடங்களில் தொழில் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இதேபோல லண்டன். மான்செஸ்டர் பகுதிகளிலும் அது வெற்றிபெற்றுள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் ஹீத்தின் தொகுதியான வெஸ்லியிலும் தொழிற்கட்சிக்கு பெருவெற்றி கிடைத்துள்ளது.

ஆளும் கட்சிக்கு மக்களிடத்தில் செல்வாக்குக் குறைந்துவருவதையே இத் தேர்தலமுடிவுகள் எடுத்துக்காட்டுவதாக தொழிற்கட்சி உபதலைவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

## இராமேஸ்வரத்துக்கு யுனெஸ்கோ உதவி

சென்னை, மே 16

வரலாற்றுப் புகழ்மிக்க இராமேஸ்வரம் ஆலய புனருத்தாரணம் செய்வதற்கு யுனெஸ்கோ ஸ்தாபனம் 12 ஆயிரம் டாலர் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. புராதன சிற்பங்களையும், சிலைகளையும் பாதுகாப்பது சம்பந்தமாக யுனெஸ்கோ நிபுணர் ஒருவர் அண்மையில் இராமேஸ்வரம் சென்று ஆலயத்தைப் பார்வையிட்டார்.

யுனெஸ்கோ உதவியுடன் புனருத்தாரணம் செய்யும் இரண்டாவது ஆலயம் இதுவாகும். முன்னர் ஸ்ரீரங்கம் ஆலய புனருத்தாரணத்துக்கு யுனெஸ்கோ 12 ஆயிரம்டாலர் நிதிஉதவிவழங்கியிருந்தது.

— —

## இ. போ. சபைக்கு

# கடந்த மாதம் மட்டும் ரூ. 1 கோடி நஷ்டம்!

கோட்டை, ஞாயிறு

இவ்வருடம் ஏப்ரல்மாதத்தில் மட்டும் இலங்கைபோக்குவரத்துச் சபைக்கு 1 கோடி 39 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. சொத்துக்களினால் ஏற்பட்ட நஷ்டம் 10 லட்சம் ரூபாய் என்றும், நாளாந்தம் மூன்றரை லட்சம்ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்றும் இ. போ. ச. தலைவர் அனில் முனசிங்கா தெரிவித்தார்.

சமீபத்தில்ஏற்பட்ட குழப்பத்தின்போது உயிரையும் பணயம்வைத்து உழைத்த சகல தரத்திலும் உள்ள ஊழியருக்கும் நன்றியும் தெரிவித்தார் அனில்

'ஓவர்டைம்' வேலை செய்வதை தவிர்க்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

## விமான தாக்குதல்

கோட்டை, ஞாயிறு

பயங்கரவாதிகள் குருநாகலை மாவட்டத்தில் மொரகொல்லகமா பகுதியில் ஒரு தபால் காரியாலயம் உட்பட புகையிரத நிலையம், கிராமசபைக் காரியாலயம் மற்றும் பல அரசாங்க கட்டிடங்களைத் தரைமட்டமாக்கியதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் பயங்கரவாதிகள் பதுங்கியிருக்கும் இடங்கள்மீது றோயல் இலங்கை விமானப்படையினர் விமானத்தில் சென்று பீரங்கி தாக்குதல் நடத்தினார்கள்.

## காலியில் பயங்கரத்துக்கு முற்றுப்புள்ளி!

கோட்டை ஞாயிறு

காலி மாவட்டத்தில பயங்கரவாத நடவடிக்கைகளை பாதுகாப்புப் படை முற்றாக ஒழித்துக்கட்டிவிட்டதாக தகவல் அமைச்சு அறிவித்தது.

நடெங்கிலும் இன்று மட்டும் 123 பயங்கரவாதிகள் பாதுகாப்புப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

அநுராதபுரப் பகுதியில் பயங்கரவாதிகள் நடவடிக்கைகள்வெகுவாகக்குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## இன்று

கீரிமலை நகுலேஸ்வரம் அல்ல — கிளிநொச்சி அல்ல: விக்னேஸ்வர — 

வில்லூன்றி ஸ்ரீ வீரமாகாளி அம்மன் அல்ல; see below.

## 'மரக்காலையை மூடாதே!'

தாவடி, ஞாயிறு

தாவடி - மானிப்பாய் வீதியிலுள்ள சொக்குவில் அரசினர் மரக்காலையை மூட வேண்டாம் எனக் கேட்டு காணி அமைச்சருக்கும் மரக்கூட்டுத்தாபனத் தலைவருக்கும் இப்பகுதி மக்கள் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

## விரைவில் நிறுவப்படும்

## வடமராட்சியில் பனம் பொருள் உற்பத்தி நிலையம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பனம்பொருள் உற்பத்தியில் தற்போது அரசாங்கம் அக்கறைகாட்டத்தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியில் இப்போது இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பனம்பொருள் உற்பத்தி நிலையங்கள் பனைமரங்கள் அதிகமாக உள்ள இடங்களில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் இந்த மாத ஆரம்பத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வப்பகுதி கிராமாபிவிருத்தி அதிகாரி பனம்பொருள் உற்பத்தி சபையின் உறுப்பினர் ஆகியோர் இந்த நிலையங்களை ஏற்ற இடங்களில் ஆரம்பிப்பதில் தீவிரகவனம் செலுத்திவருகின்றார்கள்.

வடமராட்சிப் பகுதியில் இலந்தக்காடு என்னுமிடத்தில் விரைவில்பனப் பொருள் உற்பத்தி நிலையமொன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை இப்பகுதி கிராமாபிவிருத்தி அதிகாரி திரு. பாலேந்திரன் மேற்கொண்டுள்ளார் அனுபவம் வாய்ந்தவர்கள் இந்த பனம்பொருள் உற்பத்தி நிலையங்களில் [illegible] தப்படவிருக்கிறார்களென்று தெரியவருகிறது.

## நிஜலிங்கப்பா இடத்துக்கு திரு. சாதிக்அலி தெரிவு

புதுடில்லி மே 16

அகில பாரத காங்கிரஸ் தலைவராக திரு. சாதிக் அலி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். முன்னர் திரு. நிஜலிங்கப்பா இதன் தலைவராயிருந்தார்.

இடைக்காலத் தலைவராக தாம் பதவியேற்றுள்ளதாகவும். கட்சிகளின் விதிமுறைகளுக்கேற்ப நடைபெறும் தேர்தலில் தலைவர் தெரிவு [illegible] பெறும் என்[illegible] புதிய தலைவர் [illegible]ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவரின் பொருளியற் கோட்பாடும் மார்க்ஸிஸமும்

"அருளில்லார்க் கவ்வுலக
மில்லை பொருளிலார்க்
கிவ்வுலக மில்லாகி
யாங்கு"
—வள்ளுவர்

பொருளியல் அடிப்படையிலேயே மக்களின் உலக வாழ்க்கை பெரும் மாறுதலையும் முன்னேற்றத்தையும் அடைந்து வந்துள்ளது. இன்று பொருளியற் துறையில் தனியாக அதிக நாட்டஞ் செலுத்தப்படுமளவுக்குப் பழைய காலத்தில் இது ஒரு தனித்துறையாகக் கருதப்படவில்லை.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் 1848-ம் புரட்சிப் புயல் மிகவும் உச்ச நிலையில் இருந்தது. மேலை நாடுகள் பலவற்றிலும் ஏற்பட்ட அரசியற் புரட்சி, தொழிற் புரட்சி ஆகிய புரட்சிகளோடுதான் பொருளியற்றுறையில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டு இத்துறை பெருமளவில் வளர்ச்சியும் அடைந்துள்ளது. ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாகத்தான் இத்துறையில் அறிஞர் பலரும் புதுப் புதுக் கோட்பாடுகளையும் விளக்கங்களையும் வெளியிடலாயினர்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பொருளியற்றுறையில் தன் எண்ண அலைகளை ஓடவிட்டவர் சிந்தனையாளர் வள்ளுவரேயன்றி வேறொருவர் இல்லையெனலாம்.

"பொருளாதாரம் செல்வத்தை மட்டும் ஆராயும் நூலன்று! முக்கியமாக மனிதனையே ஆராயும் சமூக நூலுங்கூட"

என்றார் மார்சல் என்பவர். ஆம் பொருளாக்கம் பயன்பாடு என்பவை எல்லாம் மனிதனின் எண்ணம்- விருப்பு வெறுப்பு- பழக்க வழக்கம்- தேவை ஆகியவற்றின் அடிப்படையிலேயே வளர்ச்சி பெறுகின்றன. ஆகவே ஒரு பொருளியற் கோட்பாட்டை ஆராயுமுன் அக்கோட்பாடு எழுந்த காலகட்டத்தை அறிவது வேண்டப்படுவதாகும்.

வள்ளுவரின் காலம், குடியரசு மலர்ந்த காலமன்று; முடியரசு தனியரசு செய்த காலம். அக்காலத்தில் மக்கள் தொகை இன்றுபோல் சிக்கலாகவும் கட்டுப்படுத்த வேண்டிய அளவிற்கும் இருக்கவில்லை; மிகக் குறைவாகவே காணப்பட்டது. மக்கள் நாகரிகத்திற் குறைந்தவராக [இன்றைய நாகரிகத்தோடு ஒப்பீட்டு முறையிலேயே இச்சொல்லை ஆண்டுள்ளேன்] இருந்தமையால் தேவைகளும் அதிகமாக இருக்கவில்லை. உணவுற்பத்திக்குப் போதுமான நிலமிருந்தது அப்போது மக்களின் முயற்சிதான் அதிகமாகத் தேவைப்பட்டதேயன்றி; இடமில்லாமை, போதாமை முதலிய சிக்கல்கள் இல்லாத காலம். அறிவியற் கருவிகளின் சிறந்த உதவிகளும் அன்றிருந்ததில்லை.

இவற்றை மனதுட்கொண்டே வள்ளுவரின் பொருளியற் கோட்பாட்டை நாம் ஆராய வேண்டும். வள்ளுவரின் பொருளியற் கோட்பாடு, இன்று மக்களிடையே பெருமளவில் மதிப்புப் பெற்று வரும் கார்ல்மார்க்சின் கோட்பாடுகளோடு பெரும்பகுதி ஒத்திருக்கின்றது. சில கொள்கைகளில் இருவருக்கும் முரண்பாடு காணப்படுகின்றது.

சமுதாயத்தின் எண்ணங்கள் எல்லாம் பொருளியல் அடிப்படையிலேயே எழுகின்றன. திடீர்ப் புரட்சி மூலமும், வலுவான சட்ட திட்டங்கள் மூலமும், யந்திர உற்பத்திச் சாதனங்கள்மூலமும், பொருள்களைப் பொதுவுடைமையாக்குவதன் மூலமும், புறத்திலே உள்ள பொருளாதார அமைப்பு முறைகளை மாற்றி பொருள் உற்பத்தி - பங்கீடு ஆகியவற்றைச் செம்மையான திட்டத்தின்கீழ்க் கொண்டு வருவதால் சமுதாயத்தின் எண்ணங்களையும்- பண்பாட்டையும் மாற்றிவிடலாம் அப்படி மாற்றிவிடுவதால் ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார சமத்துவமுற்ற புதிய உலகத்தை உருவாக்கிவிடலாம் என்று மார்க்ஸ் கூறுகிறார். ஆனால் வள்ளுவர் மனிதனின் எண்ணங்களை நல்வழிப்படுத்துவதனுலேயே பொருளாதாரச் சிக்கல்களை ஒழித்து உயர்வு தாழ்வற்ற - சுதந்திரமான உலகத்தை உருவாக்கலாம் என்று கருதினார். பிராய்டு என்னும் உளவியல் அறிஞர் கார்ல் மார்க்சின் கோட்பாட்டைப் பற்றி 'வாழ்க்கையின் ஒரு தத்துவம்' (A Philosophy of Life) என்ற கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் 'பொருளாதார அமைப்புக்கள் மனித வாழ்க்கை மேல் செலுத்தும் பலவாறான ஆதிக்கம்பற்றி மார்க்ஸ் கூறியுள்ள சித்தாந்தங்கள் மறுக்க முடியாதவை. ஆனால் சமுதாய மாற்றங்கள் பரிணாமகதியாக ஏற்படுகின்றன என்பவை போன்ற சில மார்க்சிசக் கருத்துக்கள் எனக்கு விசித்திரமாகப்படுகின்றன. பொருளாதாரப் பிரச்னை மாத்திரமே மனிதனுடைய குணவியல்புகளுக்குக் காரணமாகிவிட முடியாது.''

## தென் புலோலி பண்டிதர்
## — வீ. பரந்தாமன் —

வள்ளுவர், மார்க்ஸ் என்ற பேரறிஞர்களின் இக்கோட்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைபோல் தோன்றினாலும் அவை இரண்டும் மனிதசமுதாயத்தை உயர்ந்த வாழ்வுக்கு இட்டுச் செல்லும் இருவழிகள் என்று கொளவதே சாலப் பொருத்தமாகும்.

மார்க்சின் கோட்பாடுகள் நேரடியானவை - உடனேயேபயன்தரக்கூடியவை. ஆனால் வள்ளுவரின் கோட்பாடு நிறைவேறக் காலம் அதிகமாகத் தேவைப்படும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இன்றுபோல பொருளாதாரப் பிரச்சினைகள் அதிகமாக இருக்கவில்லை. எனவேதான் புரட்சி - யந்திர உற்பத்தி என்பவற்றின்மேல் வள்ளுவரின் எண்ணங்கள் ஓடவில்லை. வள்ளுவர் சுரண்டலை ஒழிப்பது - தேவைகளைச் சுருக்குவது - நல்லொழுக்கங்களை ஏற்படுத்துவது - உற்பத்திக்காக ஊக்கமளிப்பது - மன்னனின் அதிகாரங்களை வரையறுப்பது ஆகிய முறைகளிலேயே தன் கோட்பாடுகளை விளக்கியுள்ளார்.

வள்ளுவரின் பொருளாதார அமைப்புகள் மிகச் சுதந்திரமானவை - அவரின் கோட்பாடு தனியுடைமைச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. எனினும் சுரண்டலை ஒழிக்கும் அதிகாரத்தை மன்னனிடம் கொடுத்துள்ளார். மன்னனின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இதுவரையும் வள்ளுவரின் பொருளியற் கோட்பாட்டைப் பொதுவாகவே அறிந்தோம். இனி, அதனைச் சிறப்பாக அறிவதற்குமுன், [illegible] ந்துகொள்ளுதல் அவசியமாகும்.

வாழ்க்கையிற் பல தேவைகள் ஏற்படுகின்றன. அவற்றுள் முக்கியமான தேவைகளாய்விளங்குவன: உணவு, உடை, உறையுள் என்பனவாம். இவற்றின் உற்பத்திக்கான மூலதனம், உற்பத்திக்கருவிகள், உற்பத்திசெய்யும்முறை, பொருள்களின் மதிப்பீடு, அப்பொருள்களைப் பங்கீடுசெய்தல், மக்கள்தொகை, தொழிலாளர் பிரச்னைகள், பொதுச்செல்வம் (அரசாங்கவருமானம்), திட்டமிடுதல் ஆகியவற்றை ஆராய்வதும் விளக்குவதுமே பொருளியற் கோட்பாடாகும்.

### நாடு

தள்ளாத விளைபொருளும் தக்கபேர் அறிஞரும், தாழ்வுபடாச் செல்வரும் சேர்வதே நல்ல நாடாகும். பெரும் பொருள் உடையதாய், யாவரும் விரும்பும் இயல்பினதாய் கேடற்றதாய் இருத்தல்வேண்டும். பசியும், பிணியும் பகையும் நாட்டின்கண் இருத்தலகூடாது. பிற நாட்டைநாடி வளம்பெறும் நாடாக இல்லாது, தன் தேவைகளைத் தானேநிறைவு செய்யும் அளவிற்கு நீர் வளம் நிலவளம் ஊக்கமுள்ள மக்கள்வளம் உடைய நாடாய் இருத்தல் வேண்டும். (திருக்குறள் அதிகாரம் 74) இதுவே வள்ளுவர் உருவாக்க விரும்பிய நாடாகும்.

### அரசு

மேற்சொன்ன நாட்டை, படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும் உடைமை. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமைக் கொள்ளுகை, தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்காமை, அறந்தவறாது அல்லவைகடிந்து மனத்தவருமானமுடைமை, இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லமை, காட்சிக்கெளிமை, கடுஞ்சொல்லனல்லாமை இன்சொலால் ஈத்தளிக்க வல்லமை, முறைசெய்து காப்பாற்றுகை, செவிகைப்பச் சொற்பொறுத்தல், பண்புடைமை கொடை அருள் செங்கோல் குடிஓம்பல் நான்கும் உடைமை ஆகிய இத்தன்மைகள் ஒருங்கே அமைந்த தலைவன் (மன்னன்) ஆளுதல் வேண்டும். (திருக்குறள் அதிகாரம் 39) அவன் நடுவுநிலைமை மாறாது குடிதழீஇ குற்றஞ் செய்தாரைத் தண்டித்துச்செங்கோல் செலுத்தல் வேண்டும்.

இதுவே வள்ளுவர் கண்ட அரசாகும். இப்படிப்பட்ட நாட்டையும்அரசையும் உருவாக்கும் பொருளியற்கோட்பாட்டை வள்ளுவர் தன் நூல்முழுதும் ஆங்காங்கே விளக்கியுள்ளார்.

இனி, தேவை - மதிப்பீடு - பங்கீடு - பொதுச் செல்வாதாரம் தொழிலாளர் சிக்கல் - திட்டமிடுதல் ஆகியவைபற்றி வள்ளுவர் கொள்கையை ஆராய்வாம்;

### தேவை

மனிதவாழ்க்கைக்குத் தேவையானவையோ பலவாகும். அத்தேவைகள், நுகர்வோரின் பழக்கவழக்கம், பண்பாடு, விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே எழுகின்றன. இத்தேவைகளில் அதிமுக்கியமான தேவையாக உணவு: உடை, உறையுள் மூன்றையுமே வள்ளுவர் எடுத்துக் கொள்கிறார்,

'ஊனுடை நெஞ்சம்
உயிர்க்கெல்லாம்
வேறன்ல
நாணுடைமை
மாந்தர் சிறப்பு'
(குறள் 1012)

'தம்மில் இருந்து
தமதுபாத் துண்டாற்றல்
அம்மா அரிவை முயக்கு'
(குறள் 1107)

என்ற குறள்களால் இது புலனுகின்றது.

[தொடரும்]

## தாய்மொழியிற் கல்வி

நீர்கொழும்பிலே அரசாட்சியாரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பள்ளிக்கூடமும் அதற்கு இரண்டு உவாத்திமாரும் ஒரு வகுப்பிற் பாடத்தைக் கேட்கிறதற்கு ஏரோப்பையால் வந்த வேறொரு உபாத்தியுமுண்டு. பிள்ளைகள் இங்கிலிசு மாத்திரம் படிக்கிறார்கள். ஒரொட்டுக்குப் படிக்கிற பிள்ளைகளின் தொகை 60. மாதமொன்றுக்கு அவர்கள் மூன்று பேனிஸ் கொடுத்து வருகிறார்கள். இன்னும் இவ்விடத்தில் இவ்வூர்ப் பிறந்த ஒருவரின் கீழாக வேறோர் தமிழ்ப் பள்ளிக்கூடமுமுண்டு. அதிலுள்ள பிள்ளைகள் மாதமொன்றுக்கு மூன்று பென்ஸ் முதல் ஆறுபென்ஸ் கணக்கு விதமாகச் சம்பளம் கொடுத்துப் படிக்கிறார்கள். இதில் படிக்கிற பிள்ளைகள் 130.

(உதயதாரகை
27 4-1843 பக். 98)

Interesting fact
Preference of the Natives
for education
in the vernacular language

At Negombo there is a Government school, with two attentive and intelligent masters, and the lessons of one class are almost daily heard by an European. The boys are taught exclusively in English. The average attendance is about 60, and they pay a fee of 3d each per month. In the same place there is a private school conducted by a native on his own account, in which Tamil alone is taught and the children pay a fee of from 3d to 6d each per month. The average attendance is about 130. This is a striking proof of the preference paid by the people to education in their own language-Friend of March

(Morning star
27-4-1843 P 100)


**தினசரி சஞ்சிகை பெருமளவில்**

கேட்டாட்சிக் குடியரசிலும், மேற்கு பேர்லினிலும் 1464 தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவற்றில் 690 பிரதானமானவை. மொத்தமாக இவற்றில் 1730 லட்சம்பிரதிகள் விலைப்படுகின்றன. சஞ்சிகைகளாக 5930 வெளிவருகின்றன. இச் சஞ்சிகைகளில் 1191 லட்சம் திருச்சபை அல்லது சமயசம்பந்தமானவை.

**வட்டியுடன் இனும் !**
**ரூபா 500/- ஐஞ்ஞூறுக்கு**
வருடம் 7 சதவீத வட்டி கொடுக்கப்படும்.
இதை ஏழு நாள் அறிவித்தலின்
எப்பொழுதும் எடுக்கலாம்
ஒவ்வொரு மாதமும்
அதிட்டமுள்ள ஒருவருக்கு
ரூபா 25/- இருபத்தைந்து
இனுமாகக் கொடுக்கப்படும்
மறு விபரங்களுக்கு:
**தம்பி அன் கோ,**
வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலாசிரியர், கவிஞர், சிறுகதை எழுத்தாளர் கல்விமான் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் "ஸா—யூ" ஹாங்காங் - சீனு ஆகிய பின்னணிகளில் மிகச் சிறந்த இலக்கியங்கள் பலவற்றைப் படைத்து உலகப் புகழ் பெற்றவர் எளிமையான சொற்களைக் கொண்டு அவர் படைத்துள்ள சிறு கதையொன்றின் தமிழாக்கம் இது.




# பனித்திரைக்குள் அவள் இருந்தாள்!

— ஸா-யூ —

தமிழில் "பன்னீரன்"

எனது மனைவி மென்மையான போக்கினள். மிக அழகிதான், அடக்கமானவளும் கூட. அன்பும் பண்பும் கொண்டவள். நாங்கள் மிகவும் நேசமாக இருந்தோம். திருமணம் முடிந்த இரண்டாம் ஆண்டே அவள் திடீரென்று மரணமானபோது எனக்கு பைத்தியமே பிடித்துவிடும்போலிருந்தது.

ஷாங்காய்க்கு அருகில் உள்ள ஆற்றுக்கு அப்பால் 'பூத்தா' இடுகாட்டில் அவளது கல்லறையில் நாள்க்கணக்கில் தங்கியிருப்பது வழக்கம். மேட்டுப்பாங்கான இடத்தில் அகன்ற சுவர் ஒன்றினால் சூழப்பட்டு விளங்கிய அந்த இடுகாடு ரம்யமாக இருக்கும். கல்லறைகள் அளவான இடைவெளியுடையவையாய் நேர்த்தியாகப் பராமரிக்கப்பட்டுவந்தன. எனது மனைவியின் கல்லறை மிக அழகானவைகளில் ஒன்று என்றுதான் சொல்லவேண்டும். மற்றவைகளுக்குச் சற்று அப்பால் பழமையான மரமொன்றின்கீழ் அது இருந்தது. கல்லறை ஸ்தூபிக்கல்லை நானேதான் வடிவமைத்தேன். அதன் சிகரம் 9 அடி உயரம்.

மரணத்தின் பின்னர், அவளைப்பற்றிய நினைவுகள் என் நெஞ்சில் பசுமையாகவேயிருந்ததால் அடிக்கடி அவளைப்பற்றிய கனவுகளில் நான் லயித்துப்போவேன். என்றாலும் காலப்போக்கில் அந்த நினைவுகள் படிப்படியாக மங்கி, பின் மறைந்தே போய்விட்டன. பிறகு யுத்தம் வந்தது; அதனால் ஷாங்காய் நகரைவிட்டு நான் வெளியேறிவிட்டேன்.

யுத்தம் முடிந்து நான் திரும்பி வந்தபோது எல்லாமே மாறியிருப்பதைப் பார்த்தேன். நானும்தான் மாறிவிட்டிருந்தேன். சண்டையின் காரணமாக இந்த மாற்றங்கள் உள்ளூர்களில் ஏற்பட்டிருக்கலாம்- அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் முன்னர்போல் எதையும் ஆழ்ந்து நோக்கும் பழக்கமெல்லாம் அற்றுப்போய்விட்டிருந்தது. வாழ்க்கையை இனி நன்றாக அனுபவிக்கவேண்டும் என்று விரும்பியிருந்தேன். என்னிடம் பணமும் நிறைய இருந்தது. அந்தக் காலத்தில் ஷாங்காயில் சரியான ஆட்களுடன் தொடர்பு ஏற்பட்டுவிடுமானால் பணம் சேர்ப்பது ஒன்றும் பிரமாதமில்லை. எனக்கு சரியான நபர்களின் தொடர்பு ஏற்பட்டிருந்தது பிறகு கேட்பானேன்!

எனக்குக் கிடைத்திருந்த நண்பர்களில் இரவு விடுதிப் பாடகியான சீ யுவான்ஷியாங் என்பவளும் ஒருத்தி. உல்லாசப் பிரியையான அவள் இளமைத்துடிப்புடன் விளங்கினாள். அல்லிமலரைப்போன்று அவள் வெண்மையாக ஜொலிப்பாள். அவளது வசீகரத்தில் நான் முற்றாகவே கட்டுண்டுவிட்டேன். என் மனைவியைப் பற்றிய நினைவு மறைந்துவிட்டது. அவளது கல்லறைக்குப் போவதையும் நிறுத்திவிட்டேன்.

கோடைகாலம் விரைவாக செத்துக்கொண்டிருந்தது. புழுக்கம் நிறைந்த ஒருதினம் மாலை சீ யுவான்ஷியாங்கையும் அழைத்துக்கொண்டு கிராமப்பகுதியில் உல்லாசமாகப் பொழுதுபோக்கலாம் என்று நான் முடிவு செய்திருந்தேன். விரைவாகச் செல்லும் கார்களில் எனக்குப் பிரியம் அதிகம். நானும் விரைவாகவே கார் செலுத்துவேன்- எங்கள் கார் மிக விரைவாகவே நாட்டுப்பகுதிக்குள் புகுந்துவிட்டது.

'ஸிஞ்சி' ஓட்டலின் முன் காரின் வேகத்தைக் குறைக்கவேண்டியிருந்தது.

ஓட்டலில் ஒரு திருமணம். புதிய தம்பதிகள் தம் காரில் ஏறிக்கொண்டிருந்தார்கள். அந்த மணப்பெண் ஒரு சிறிதுதான் என் கண்ணில் பட்டாள். என்றாலும் அந்த ஒரு பார்வையிலேயே என் மனைவியின் சாயலை அவள் மிகவும் ஒத்திருந்தாளென்று கண்டுகொள்ள முடிந்தது. எங்கள் திருமணமும் இந்த ஸிஞ்சி ஓட்டலில்தான் நடந்தது. அந்தத்திருமணக்காரில் ஏறும் தம்பதிகள் நானும் என் மனைவியும் போலவே- அந்தப் பழைய உணர்வு ஒரு கணம் எனக்கு ஏற்பட்டது.

அதன் பின்! அது எவ்வாறு நடந்ததென்று எனக்குத் தெரியாது. காரின் வேகத்தைக் கட்டுபடி மிக துரிதமாக 'நான்கிங்' பாதையில் திரும்பியதாக ஞாபகம். அந்த ராணுவ 'டிரக்' எங்கள்மீது மோதியபோது ஏற்பட்ட தாக்கம் இன்னும் நினைவிருக்கிறது.

0 0 0

'அப்போ — நீர் திரும்பி வந்துவிட்டீர்?'

யாரோ என்னிடம் சொல்வது போன்ற பிரமை. அது என் மனைவிதான்; ஆழ்ந்த சாம்பல் நிற கவுனும் கட்டையான கோட்டும் அணிந்திருந்த அவள், பாக்கெட்டுகளில் கைகளை விட்டபடி நின்றுகொண்டு என்னைப் பார்த்து முறுவலித்துக் கொண்டிருந்தாள். பழகிப்போன அந்தப் புன்முறுவலில் கவலையின் சாயலும் தெரிந்தது.

என் கைகளால் அவள் கைகளைப்பற்றினேன். அவை மிகவும் சில்லிட்டிருந்தன. ஆனால் உறைபனியின் கடும் குளிர் உணர்ச்சியொன்று என் உடல் முழுவதும் பரவியது. இதை அவளும் உணர்ந்துவிட்டாள் போலும். சட்டென கைகளை எடுத்துக் கொண்டு விசும்பத் தொடங்கிவிட்டாள்.

மெதுவாக - ஒருவாறு அவள் அமைதியடைந்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். பின்னர் சொன்னாள்:-

'மீண்டும் நீங்கள் என்னை விட்டுப் பிரியமாட்டீர்கள்- அல்லவா? இங்கே உங்களுக்காக நான் ஓர் இடம் ஒதுக்கி வைத்திருக்கிறேன்.'

விரைவாக ஓர் அறைக்குள் என்னை இட்டுச் சென்றாள். சிறியது, இருளாய் இருந்தாலும் வசதியான அறை. கட்டிலின்மேல் அமர்ந்து நான் மெதுவாகச்சொன்னேன்.

'இத்தனை ஆண்டுகளின் பின் நான் மிகவும் களைத்துப்போய் இருக்கிறேன்; என்னைச் சற்று உறங்கவிடு-ஒரு கொஞ்ச நேரம்-சரியா...?'

0 0 0

ஆஸ்பத்திரியில் நான் கண்விழித்தபொழுது தாதிப்பெண் ஒருத்தி என் பக்கமாக குனிந்துகொண்டிருந்தாள். எனக்கு மோசமான காயம் எதுவுமில்லை. பிரக்ஞை இருந்தது. நெஞ்செலும்பு ஒன்றோ இரண்டோ முறிந்திருக்கவேண்டும். ஒரு சில வாரங்கள் ஓய்வெடுத்துக்கொண்டால் எல்லாம் [illegible] நான் அதிச[illegible] உயிர் தப்பி[illegible]

அப்படித்தான் சொன்னார்கள்.

சீ-யுவான்ஷியாங்கின் நிலை என்னவென்பதை அறிய உண்மையில் எனக்கு பெரும் ஆவலாய் இருந்தது. அவளைப்பற்றி தொடர்ந்து விசாரித்தேன், சிலநாட்களின் பின்னர் ஒரு தாதி சொன்னாள்- அவள் இறந்துபோனாளென்று. ஸ்தலத்திலேயே அவள் பலியானளாம்!

அவளுடைய மரணம் பெரும் அதிர்ச்சியாகவிருந்தது. ஏதோ குற்றம்செய்துவிட்டதாக நான் பெரிதும் கவலைப்பட்டேன். அவள்மீது எனக்குப்பிரியம் இருந்தது. திருமணம் செய்துகொள்ளவும் நினைத்திருந்தேன். ஆனால் அவளது மரணத்துக்கு நானே காரணமாகவுமிருந்துவிட்டேன். நீண்டநாட்கள் இந்தக்கவலை பீடித்துக்கொண்டது. கால ஓட்டத்தில் யுவாங் வியாங்கைப் பற்றிய கவலை ஒரு பக்கமிருக்க - நான் மீண்டும் என் மனைவியைப்பற்றி அவள் மரணமான சமயத்திலே போலவே கனவுகாணத் தொடங்கியிருப்பதை உணர்ந்தேன்.

சில சமயங்களில் நாங்கள் ஷாங்காயில் இருப்பதுபோலவும், சில சமயம் கிராமப் புறத்தில் உலவுவதுபோலவும், இன்னும் சில சமயங்களில் ஜப்பானியதுருப்புகள் துரத்திவர இருவரும் தப்புவதற்காக ஓடுவதுபோலவும் தெரியும். எந்தச் சூழ்நிலையானாலும், கனவுகள் தெளிவாகவிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுமட்டும் மாற்றமடையாமலேஇருந்துவந்தது-அதுதான் என் மனைவியின் முகம்!

அவள் மரணமாகி ஒன்பது ஆண்டுகள் கடந்துவிட்டன.

இதற்குள் நான் பெரிதும் மாறிவிட்டேன். ஆனால் என் கனவுகளில் என் மனைவி எங்கள் திருமணத்தின்போது இருந்ததுபோலவே தோற்றி வந்தாள். அந்தக் கவலைதோய்ந்த - விசித்திரமான கவர்ச்சி பொருந்திய புன்முறுவல் மாத்திரம் மாறாமலே தெரியும்!

நான் என்னையே கடிந்துகொண்டேன். அவளை நான் ஏன் மறந்தேன்? எனது வாழ்க்கையிலிருந்து அவளது அடையாளங்கள் யாவற்றையும் ஏன் அழித்தொழித்தேன்? திரும்பி வந்த பின்பாவது, அவளது கல்லறைக்கு ஒரு தடவையாவது ஏன் போகாமலிருந்தேன்? ஆஸ்பத்திரியைவிட்டு வெளியில் வந்ததும் அந்தக் கல்லறையைப்போய்ப்பார்ப்பதென்று தீர்மானித்துக் கொண்டேன். எட்டாம் மாதம் 14-ம் நாள் மத்திய இலையுதிர்காலத்தின் பெருநாளுக்கு முந்தியநாள்- ஆஸ்பத்திரியிலிருந்து வெளிவந்தேன்.

(2)

பூத்தா இடுகாட்டுக்குப் போவதானால் துங்கோவுக்கு வள்ளத்தில் சென்று ஒரு லி (லி—1/3 மைல்) தூரம் நடந்தாகவேண்டும் அன்று-அந்தப் பதினைந்தாவது நாள் நான் இரண்டுமணிக்கு செல்லும் வள்ளத்தில் புறப்பட்டேன். நான்தான் ஒரேஒரு பிரயாணி

அது ஒரு இருள் கவிந்த நாள். வானம் கனத்து மப்பாய்க்கிடந்தது. ஆனால் காற்றுயில்லை, உடனேமழை பெய்யும் அறிகுறியும் இல்லை.

"கியான்ஞாங்" பகுதியில் அந்தப் பருவத்தில் அதிக உஷ்ணம் இருக்காது. மரங்கள் யாவும் பழுப்படைந்து காணப்படும். வயல்கள் வெறுமையாயும் கிராமங்கள் வெறிச்சோடியும் காணப்பட்டன. எனக்குஎவரும் எதிர்ப்படவில்லை. மெதுவாக நடக்கத்தொடங்கியிருந்த என் மனத்தில் தனிமையுணர்ச்சியொன்று மெதுவாகப் புகுந்துகொண்டது. இடுகாட்டுக்கு நான் வந்து சேர்ந்த பொழுது ஏறத்தாழ மூன்றரைமணி இருக்கும்.

அதனை அடையாளம் காண்பதே முடியாமல் இருந்தது. ஒரு காலத்தில் அகலமாய் இருந்த சுவர் தகர்ந்து போய்க்கிடந்தது. ஒருபொழுது வாயில் கேட் இருந்த இடத்தில் இரண்டு தூண்கள் மட்டும் நின்றன. மரங்களில் பலவற்றைக் காணவில்லை. விறகுக்காக வெட்டித் தள்ளப்பட்டுவிட்டன. நடைபாதைகளும், பூஞ்செடியாதிகளும் புற்களும் புதர்களும் வளர்ந்து மறைக்கப்பட்டுக்கிடந்தன. கல்லறைகளின் கற்கள் எல்லாம் புரண்டு விழுந்து புற்புதர்களுக்குள் உடைந்து கிடந்தன. சரியாக புதைபடாத சவப்பெட்டிகள் அங்குமிங்கும் சிதறுண்டு கிடந்தன. மக்கிப்போன வைக்கோல் பாய்கள் தான் அவைகளுக்குப் பாதுகாப்பு. கண்ணுக்குத் தெரியாத இடத்தில் இருந்துகொண்டு பறவையொன்று உற்சாகமின்றி அவ்வப்போது குரல் கொடுத்துக்கொண்டிருந்தது.

என் மனைவியின் கல்லறையைக் கண்டுபிடித்துவிட முடியுமாவென்றுகூட ஐயமாய் இருந்தது. ஆனால் புதர் ஒன்றின் இடைவெளியில் பனித்திரையொன்றினுக்கப்பால் சாம்பல்நிற ஆடையொன்றின் ஒருபகுதி சிறிது சிறிதாக என் கண்ணில் பட்டது அந்த இடத்தைத் தவிர வேறு எங்கும் பனியே இல்லை. அந்த உயர்ந்த பழைய மரத்தையும் காணவில்லை. ஆனால் தூண்கள் இன்னும் நின்றிருந்தன.


உயர்ந்த புற்புதர்களைத் தள்ளிக்கொண்டு எனது மனைவியின் கல்லறையை நோக்கி நான் சென்றேன். நான் அநேகமாக அந்த இடத்தை அடைந்துவிட்டேன். அந்தச்சமயத்தில் சில அடிகள் தள்ளி கல்லறையொன்றில் ஒரு பெண் நின்றிருப்பது கண்ணில் பட்டது.

சாம்பல்நிறக் கவுனும் கட்டையான மேல்கோட்டும் அவள் அணிந்துகொண்டிருப்பது அந்த மூடுபனியிலும்கூட எனக்குத் தெரிந்தது. முதுகுப்புறம் என்பக்கமாகத் திரும்பி நின்றுகொண்டிருந்த அவள் இப்பொழுது என் பக்கமாகத் திரும்பி பார்வையைச்

[9-ம் பக்கம் பார்க்க]

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74 A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(11)

சிறைச்சாலை!

இப்பொழுது நினைத்தாலும் அந்தப் 'புதுவாழ்வு நிலையம்', ஒரு கடூழியச் சிறைச்சாலை போலவே அவனுக்குப் பட்டது.

அம்மா-கமலா துழாவித் துழாவிக் கேட்ட கேள்விகளுக்கு அவன் பதில்களைக் கொட்டிக் கொண்டிருந்தான். சில கேள்விகள் அவனைச் சங்கடத்திலாழ்த்திய போது, அந்தப்பெண் முதல் நாளிரவு அவனுக்கு ஆர்வத்தோடு படைத்த உணவின் சுவை அவன் நாவிலே தோன்றி அவனைத் தூக்கி நிறுத்திற்று.

மண்டபத்தில் மணிக்கூடு எட்டுமணி அடித்து ஓய்வதன் முன்னரே கண்டாமணியின் ஓசை, சுழல்காற்றிலகப்பட்டுச் சருகாய்ச்சுழன்ற அவன் மனத்தினுள்ளே அமைதியைத் தோற்றுவித்தது.

"இந்த மணி ஓசையை அடுத்து என்ன?'

"சரி மணி அடித்துவிட்டது நீ போய்வா செல்வம் உன்னைப் பள்ளியிற் சேர்த்து விடுவான்."

கமலா உள்ளே போய்விட்டாள்.

கமலாவின் கேள்விப் பெருக்கிலிருந்து தப்பிவிட்டாலே போதும் என்ற எண்ணத்தில் அங்கிருந்து புறப்பட்டான்.

அவன்கால்கள் அவனையறியாமலே படுக்கை மண்டபத்தை நோக்கி நகர்ந்தன.

உள்ளே சிறுவர்கள் எல்லோரும் கையில் ஏந்திய பிளாஸ்டிக் தட்டுகளோடு ஒழுங்காக நின்று கொண்டிருந்தார்கள். சோமுவைக் கண்டதுமே, செல்வம் அவனிடம் ஒரு தட்டைக் கொடுத்து, வரிசையின் கடைசியில் நிறுத்தினான்.

ஒழுக்கெறும்புகளாய் ஊர்ந்து சென்ற சிறுவர்கள், முன்புதேநீர் பெற்றுக் கொண்ட மண்டபத்தினுள் புகுந்து, வரிசையில் நகர்ந்தார்கள் சோமு கடைசியாக நுழைந்தான் மண்டபத்தின் ஒரு கோடியில் ஒரு மேசையின்மேல் இரண்டு பாத்திரங்கள். அவற்றின் முன்னால் நின்ற சிறுவர்களில் ஒருவன் ஒவ்வொரு தட்டிலும் மூன்று அல்லது நான்கு தோசைகளை வைக்க, மற்றவன் ஒரு மரக்கரண்டியால், மிளகாய்த் துவையலை அவற்றின் மேலிட்டான்.

தோசையைப் பெற்றுக் கொண்டவர்கள் மண்டபத்தின் இருபுறமும் நீளப்பாட்டுக்கு விரிக்கப்பட்டிருந்த கயிற்றுப்பாய்களின் முன்னால் நின்றுகொண்டிருந்தார்கள். கடைசியில் சோமுவும் தோசையைப் பெற்றுக் கொண்டு தனக்குரிய இடத்தில் வந்து நின்றதுமே எல்லோரும் கயிற்றுப்பாயில் உட்கார்ந்தார்கள். அவன் சாப்பிடத்தொடங்கியதைக் கண்டதுமே எல்லோரும் தோசையைச் சுவைக்க ஆரம்பித்தார்கள்.

முதல்கவளம் சோமுவின் தொண்டைக்குழியுள்இறங்க மறுத்தது.

சின்னப் பையனாக இருந்த போது ஆனந்தனுக்குத் தோசையென்றால் உயிர். 'சோதை, சோதை' என்று அவன் தன் சிறிய விரல்களால் தாயோ தமையனோ பிய்த்துப் போட்ட தோசைத்துண்டுகளை வாய்க்குள் செலுத்துகிற அழகு சோமுவின் கண்களில் கண்ணீர்ப் படலமாய் நின்றது.

அவன் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறானோ'.

மற்றவர்கள் தன்னையே பார்க்கிறார்களோ என்ற எண்ணத்தில், நினைவையும் தோசையையும் சங்கடத்தோடு மென்றுவிழுங்கினான். ஆனால் அவன் நினைத்தது போல, மற்றவர் எவருமே அவன் பக்கம்திரும்பவில்லை. யந்திரங்கள்போல, அவர்கள் தோசையை மென்று விழுங்கிக் கொண்டிருந்தார்கள்.

சாப்பிடும்போது சோமுவின் மனம் தாயோடு கஷ்டப்பட்ட காலத்திலிருந்து இன்றைக்கு வரையுமுள்ள நிகழ்ச்சிகளைச் சலனப்படம் பார்ப்பதுபோல, ஒருமுறை தொட்டுப் பார்த்து மீண்டது.

மற்றைச் சிறுவர்கள் என்னதான் யோசித்துக் கொண்டிருந்தார்களோ! பசும்புல்லைக்கண்ட பசுப் போல, முகத்திலே எதுவித சலனமுமின்றி, சாப்பாட்டில் லயித்துப்போயிருந்தார்கள்.

சாப்பிட்டு முடிந்ததும் உள்ளேபோய், தட்டுகளை வைத்துவிட்டு, அரைக்காற் சட்டையும் ஒரு சட்டையும் அணிந்து கொண்டார்கள். எல்லோரையும் போலவே சோமுவும் தனக்குக் கொடுக்கப்பட்ட நீலநிறக்காற் சட்டை ஒன்றையும் வெள்ளைச் சட்டையையும் போட்டுக்கொண்டான்.

இரண்டு வரிசைகளில், செல்வத்துக்குப்பின்னால் புத்தகங்களை ஏந்திக்கொண்டு சிறுவர்கள் நகரத்தொடங்கினார்கள். காய்கறித்தோட்டங்களைக் கடந்து மாஞ்சோலைக்கூடாக நடந்து புதுவாழ்வு நிலையத்தின் பின்புற எல்லைக்கு வந்தார்கள். அங்கே இருந்த சிறிய படலையைச் செல்வம் திறந்தான். சிறுவர்கள் எல்லோரும் வெளியேசென்று ஒழுங்காக நின்றார்கள். படலையைச் சாத்திப் பூட்டிய பிறகு செல்வம் முன்னணிக்கு வந்து நடக்கத்தொடங்கினான். சிறுவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

எதிரே இருந்தவயல் பாலைவனமாய்த் தெரிந்தது. அதன் ஓரமாகக் கிடந்த பாதையிலே சிறுவர்கள் அணிவகுத்துச்சென்றார்கள். காய்ந்து வரண்டு வெடித்துக்கிடந்த வயல்கள் சோமுவுக்கு ஈச்சங்குளத்தை நினைவுபடுத்தின. சுற்றி வளைந்து, வயல்களுக்கு வரம்பாயமைந்த வண்டிப் பாதைகளையும், வயல்களுக்கூடாகக் கிடந்த ஒற்றையடிப் பாதைகளையும் கடந்து மேட்டுநிலத்துக்கு அவர்கள் வந்துசேர்ந்தபோது, எதிரிலே தென்பட்ட கிராவல் ரோட்டில் அங்குமிங்குமாய்இரண்டொருவர் போய்க்கொண்டிருந்தார்கள். தூரத்தில் ஒரு வண்டி. அதற்குமப்பால் ஒரு டிராக்டர். புதுவாழ்வு நிலையப் புதுமைகளையுந் தாண்டி, வெளியே ஓர் உலகம்இருப்பதை நினைவுபடுத்திக்கொண்டு இவை ஊர்ந்து சென்றன.

புறப்பட்டுக் கால் மணிக்கு மேலாகிவிட்டது. கிராவல் ரோட்டிலும் அரைமைல் வரை நடந்த பிறகு இருபுறமும் தொட்டந்தொட்டமாய்க் குடிமனைகள் தோன்றின. மனைகளைச் சூழ இளந்தென்னைகளும், கமுகுகளும் மாங்கன்றுகளும் கோடையின் பிடியில் குறுகி நின்றன வீதியிலே சில சிறுவர்கள் அழுக்கேறிய உடைகளோடு புத்தகங்கள் காவிச் சென்றுகொண்டிருந்தார்கள். சிறுமிகள் சிலரின் சட்டைகளில் தெறிகளோ, ஊசிகளோ இல்லை.

அணிவகுப்புத்திடீரென்று வலது புறமாகத் திரும்பி ஒழுங்கை ஒன்றினுள் இறங்கிறது. முதலில் தென்பட்ட பெரிய அரசமரத்தின் கம்பீரம் சூழவுள்ள எல்லாவற்றையும் விழுங்கிக்கொண்டிருந்தது. பக்கத்திலே, உடைந்துநிலத்திலேவிழுந்து கிடந்த படலையைத் தாண்டி இந்த அணிவகுப்பு உட்சென்றது.

தென்னோலைக் கீற்றுக் கூரையின் கீழே, அரைச் சுவர்களின் உள்ளே தாறுமாறாகக் கிடந்த வாங்கு மேசைகளின் மேல் பல சிறுவர்கள் ஏறிக்குதித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்

நாலுஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஏதோ ஒரு பாடசாலையிலிருந்து வெளியே காலை வைத்த சோமு மறுபடியும் ஒரு பாடசாலையையும் எட்டிப்பார்க்கவில்லை. ஆனந்தனைக்கூட அழைத்துச் செல்வதற்கு அவன் விரும்பவில்லை. அதற்குரிய காரணம் இன்னும் அவன் மனத்தில் வேம்பாய்க் கசந்துகொண்டிருந்தது.

பல நாட்களாகவே அவனிடம் வகுப்புக்குரிய புத்தகம் [illegible] அவன் கஷ்டமான [illegible] கண்டு ஒட்டாண்டியாய் இருந்த பரிதாப நிலையைக் கண்டு மனத்தினுள்ளே அவன் அழுதிருக்கிறான். அந்த நிலையில் புத்தகம் வேண்டும் என்று வீட்டில் கேட்கவே அவனுக்கு வேதனை கலந்த கூச்சம். படிக்கிறது மாணவன்புத்தகமில்லை என்ற சிந்தனையேயற்ற ஆசிரியருக்கு அவன் புத்தகமில்லாமலே எப்படிப் பாடங்களை எல்லாம் சரியாகப்படித்து விடுகிறான் என்பது புரியாத புதிராக இருந்திருக்கவேண்டும். அந்தப் புதிரை அவிழ்க்கவோ என்னவோ 'எங்கேடா புத்தகம்?' என்ற கேள்வியோடு அவன் முதுகிலே ஒரு தினம் நாலு குறி வைத்துவிட்டார். அதுவும் போதாதென்று 'புத்தகம் வாங்க வழியற்ற நாயள்-படிக்கமட்டும் வந்துவிடுங்கள்' என்று தன் அழுக்கு வாயையும் கழுவிவிட்டார்.

அடியை வாங்கிக்கொள்வச் சோமு தயங்கியிருக்க மாட்டான். அந்தப்பேச்சு-! "புத்தகம் தேவையா படிப்புத்தேவையா?'—'நான் எந்தப் பாடத்திலே மற்றவர்களிலும் குறைவு?'— 'புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டே 'ஆ'னாத் தெரியாமலிருக்கிற பையன்களுக்கெல்லாம் ஏன் பெரிய சலுகை? நல்ல உடுப்போடு வருகிறவர்களுக்குச் சலுகை, படித்தாலும் நமக்கெல்லாம் உதைதானா?'

உள்ளே குமுறுகிற சிறிய எரிமலையாய் அவன் வீடு வந்தபோது அவன் தாய் தலையிலே கை வைத்துக் கொண்டிருக்கிறாள். ஆனந்தன் தூரத்தில் படுகதுத் தூங்கிக் கொண்டிருக்கிறான் நிலைமையில் ஏதோ 'பழுது' வந்துவிட்டதை அவன் உட்புலனொன்று உணருகிறது.

'அம்மா, அப்பா வந்திட்டாரா?

அம்மா நிமிர்ந்து மகனைப் பார்க்கும்போதே கண்கள் குளமாகிக் கரைகடந்தோட ஆரம்பித்துவிட்டன சோமுவை அணைத்துக் கொண்டு அவள் புலம்புகிறாள்.

'உங்க அப்பா எல்லாரையும் தவிக்கவிட்டிட்டு ஓடிப் போயிட்டார். எப்ப எப்ப வாறனோ தெரியாது என்டு கடுதாசி எழுதி அனுப்பியிருக்கார்.'

அவளது ஓலத்தோடு, முன்னரே குமுறி ஊழையிட்டுக் கொண்டிருந்த சோமுவின் உள்ளமும் ஒருங்கிசைத்தது.

அந்தக் கணமே தன் பாடசாலைக் கசப்புக்கும் தன் அப்பா ஓடிவிட்ட வேதனைக்கும் ஒரு முடிச்சைப்போட்டு 'இனிப்பள்ளிக்குள் காலெடுத்து வைப்பதேயில்லை' என்ற முடிவுக்கு வந்துவிட்டிருந்தான்

இன்று இந்த அரசடிப் பள்ளிக்கூடத்துள் காலெடுத்து வைத்ததுமே அந்தச் சம்பவமெல்லாம் சோமுவின் முன்னே தோன்றி அவனைப் பரிகசித்தன.

'அதே வாத்தியார் இங்குமிருந்துவிட்டால்......?

'அதே வாத்தியாரைப் போலத்தான் மற்ற வாத்தியார்மாரும் இருப்பார்களோ?'

திடீரென்று அங்கு நிலவிய சூழலில் ஏற்பட்ட மௌனம் அவனைப் பிரமிக்க [illegible] ராமதார்கள் [illegible] மேசையிலும் சுவர்க [illegible] நின்ற சிறுவர்கள் சித்திரப் பாவைகளாய் வாங்குகளில் அமர்ந்துவிட்ட காட்சியில் அவன் தன்னை மறந்து நின்றுவிட்டான்.

'ஏண்டா நடுவழியிலே மரம் மாதிரி நிக்கிறே?'

சோமு திரும்பிப் பார்க்கிறான்.

வாத்தியார் ஒருவர் நின்றுகொண்டிருக்கிறார்.

'நீ எந்த வகுப்படா?'

அவனுக்குத் தெரியுமா? ஐந்து வருடங்களுக்கு முன்பு ஐந்தாம் வகுப்பிற் படித்த நினைவிருக்கிறது.

'தடியா, எந்த வகுப்பென்டு கேட்டா சொல்லத் தெரியாது?'

வாத்தியாருக்கு அவனைத் தெரியாது என்பது மட்டுமல்ல, அங்கு படிக்கிற மாணவர்களையே தெரியாது என்பதைப் பறையடித்துக் கொண்டு வாத்தியார் நின்றார்.

பள்ளிக்கூடம் முழுவதும் அந்த இருவரையுமே பார்த்து ரசித்துக்கொண்டிருந்தது.

"ஏண்டா ஊமை எந்த வகுப்படா நீ?'

'தெரியாது''

'தெரியாதா!' என்று வெடித்த வாத்தியாரின் வலக்கை சோமுவின் காதொன்றைப் பற்றித் திருக ஆரம்பித்தது.

செல்வம் ஓடி வந்ததில் நிலைமை மாறிற்று. அவன் கொடுத்த கடிதத் துண்டை வாத்தியார் படித்துப் பார்த்துவிட்டு, 'ஓ நீ புதுசா?' என்று சமாளித்தார்

'நீ ஐந்தாம் வகுப்பில் போயிருக்கலாம்' என்று தீர்ப்பு வழங்கிவிட்டு வாத்தியார் நடுமண்டபத்தில் தனித்திருந்த ஒரு மேசையருகே போய் அமர்ந்து கொண்டார்.

செல்வம் காட்டிய வகுப்பில் சோமு போய் இருந்தான், அவன் கொடுத்த இரண்டு மூன்று புத்தகங்களையும் வைத்துக் கொண்டான். அவமான உணர்ச்சியும் ஆத்திரமும் அவனை அழுத்திக் கொண்டிருந்தன

அரைமணி கழித்து வேறுமொரு வாத்தியார் வந்து சேர்ந்தார் அரிவரியிலிருந்து ஏழாம்வகுப்பு வரை அங்கே எட்டு வகுப்புகள். அன்று ஏறக்குறைய நூறு மாணவர்களுக்குமேல் வந்திருந்தார்கள். ஆசிரியர்கள் இருவரும் அங்குமிங்கும் நடந்தார்கள். பத்து மணிக்குமேல் முதலில் வந்தவர் தலைமையாசிரியராம்! வெளியேபோய் அரைமணி கழித்து வந்தார். பதினொரு மணிவரையில் 'பனிஸ்'விநியோகம் நடைபெற்றது. மிகுதியாக இருந்த பனிஸ் ஐம்பது வரையிலிருக்கும். இரண்டு பார்சல்களாகக் கட்டப்பட்டன. இரண்டு மாணவர்கள் அவற்றை எடுத்துக்கொண்டு வெளியே போனார்கள். வேறிரண்டு மாணவர்கள் கட்டிடத்துக்கு வெளியே போனார்கள் வேறிரண்டு மாணவர்கள் கட்டிடத்துக்கு வெளியே அலுமினியப் பாத்திரம் ஒன்றிலே நீர் கொதிக்க வைத்துத் தேநீர் தயாரித்து இரண்டு தகரப் பேணிகளில் ஆசிரியர்களுக்குக் கொடுத்துப் பூரித்தார்கள்.

பள்ளிக்கூடம்,பாடம் என்பன சம்பந்தமானவற்றைத் தவிர, வேறேதோ பாரதூரமான விஷயங்களையிட்டு ஆசிரியர்கள் இருவரும் பேசிக்கொண்டேயிருந்தார்கள்.

ஒரு மணிக்குக் கண்டாமணி அடிக்கப்பட்டது. பள்ளிக்கூடம் குளோஸ்

ஆட்டுமந்தைகளாய் வெளியேறிக் கொண்டிருக்கும் மற்ற மாணவர்களைப் பற்றிய சிந்தனையேயில்லாமல் புதுவாழ்வு நிலைய அணிவகுப்பு நகரத் தொடங்கியது.

'சோமசுந்தரம் நாளைக்குப் புத்தகம் எல்லாம் கொண்டு வர வேண்டும்'

காலையில் காதை வார்ந்த அதே வாத்தியார்தான்.

இன்று என்னிடம் புத்த[கம்] இல்லையென்ற நினைப்பி[ல்]தான் பாடம் நடத்தவி[ல்]லையோ?'

மனதுகுறுகுறுக்க கா[லை]யில் செல்வந்தந்த புத்தக[க்] கட்டை வாத்தியாரின் மூஞ்சிக்கு நேரே தூக்கி சோமு காட்டினான்.

தேள் கொட்டிவிட்டதே வாத்தியாருக்கு? முகத்தை திருப்பிக்கொண்டே, 'ச[ரி] நாளைக்குப் படிப்போம்' என்[கி]றார்.

அதே கிராவல் ரோட்டு வயல், வண்டிப்பாதை. இப்பொழு[து] நல்ல [illegible]

புதுவாழ்வு நிலையத்தி[னு]ள்ளே பின்கதவால் நுழை[ந்]தபோதுதான் இந்த ஊ[ர்] பாலைவனமல்ல என்று நினை[ப்]பு மீள்கிறது.

மத்தியான உணவும் அதே ஒழுங்குமுறை கெ[டு]பிடியோடு முடிந்தது. அதன் பிறகு அரைமணி நேரம் ஓய்வு.

கட்டங்கூட்டமாய் படு[க்]கை மண்டபத்துத் தரை[யி]லே இருந்துகொண்டு இர[ு]வர்கள் கதைத்தா[ர்]கள். [illegible] துக்கு முன்னர் அவர்கள் பார்த்து விளங்கமுடியா[த] திகைத்த 'பத்துக்கட்டளை[க]ள்' ஆங்கிலப் படத்தில் [இ]ருந்து.இன்றைய மதியான உணவில் பரிமாறப்பட்ட சாம்பாரில் காணப்பட்ட [க]த்தரிக்காயா வாழைக்காயா என்பதுவரை அவர்களது பேச்சிலடிபட்டது.

இத்தனை மணி நேரமாக எதுவுமே பேசாமல், மௌனத்தின் ஆட்சியிலே யந்திரங்கள் போல இயங்கிய சிறுவர்கள், இப்பொழுது பேசிச் சிரித்து மகிழ்வதைக் காணச் சோமுவுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

யாரோ இரண்டொரு பையன்கள் சோமுவோடு பேச்சுக் கொடுத்தார்கள்.

'பெயரென்ன, ஊர் எது' என்பவற்றோடு அவர்களின் கேள்விகள் நின்றுவிட்டன. அதற்குமேல் கேட்கவிரும்பவில்லையோ, தெரியாதோ என்று சோமுவுக்குப் புரியவில்லை.

வேறும் சில பையன்கள் சோமுவைப் பார்த்துப் புன்னகை செய்தார்கள்.

(வளரும்)

---

(சென்றவாரத் தொடர்ச்சி)

இந்த நோக்கம் நி[றை]வேற வளமான அவர்கள [ின்] பண்டைக் கலைச் செல்வ[ங்]களையெல்லாம் மக்கள்மு[ன்] வைக்கவேண்டும். இவ்வ[கை]யில் இதுவரை நடந்[து]ள்ள வேலை மிகவும் குறை[]வாகவே இருப்பினும் நா[ளு]க்குநாள் அதிக அளவி[ல்] ஆரம்பவேலை நடந்துவ[ரு]வது மகிழ்ச்சி ஊட்டுவதாக உள்ளது. திரு ஓ சி கா[ங்]கோலி அவர்கள் எழுதி[யு]ள்ள தென் இந்திய செ[ப்]புப் படிமங்கள்(South India[n] Bronzges) என்ற இந்த நூ[ல்] இத்துறையில் எழுதப்ப[ட்]டுள்ள ,மிகச் சிறந்தவற்று[ள்] ஒன்றாகும். வட இந்தி[ய] அளவிற்கு படை எடுப்[பு]களினாலும் கலைப்பகைவர்[க]ளாலும் தென்னிந்திய[ா] நாசமடையாததனாலும் ச[ரி]த்திர காரணங்களால் இ[ந்]தியப் பண்பாட்டின் மைய[ம்] வட இந்தியாவிலிருந்[து] தென்இந்தியாவிற்கும் மா[றி]விட்டதாலும் கலைச்செல்வ[ங்]கள் தென் இந்தியாவி[ல்] நிரம்பியுள்ளன ஸ்ரீகங்கோ[லி]யின் நூல் தென் இந்திய[ா]வின் கலைப்படைப்பின் ஒ[ரு] பகுதியாகிய அதன் செ[ப்]புப் படிமங்களின் பெரு[ம்]பாலும் சைவசமயத் தெ[ய்]வங்கள் அடியார்கள் இ[வ]ர்களுடைய வடிவங்களி[ன்] சுமார். நூறு படங்க[ள்] (Plates) [illegible]கு அ[illegible] றது. (அவற்றின் வர்[illegible] மாக அமைந்த ஐந்து அத்[illegible]

---

# யோக பலம்

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

யோக பலம்பெற வேண்டும் - சக்தி
ஊற்றென வாழ்ந்திட வேண்டும் - சிவ
போக சுகம்பெற வேண்டும் - மண்
பொன்னுல காகிட வேண்டும்

தூய நல் லுணவுடை போற்றி - நாளும்
தூயநற் கடமைக ளாற்றி
தாயெனப் பெண்மையைக் கருதி - சுத்த
சாதனஞ் செய்திட வேண்டும்

அன்பு செய்தலே பக்தி யோகம் - நல்ல
அருட்பணியே கரும யோகம் - யோகம்
மன்பதை ஆத்ம சமானம் - என
மதிப்பதுவே சம யோகம்

கல்வியை வளர்ப்பது யோகம் - தெய்வக்
கலையினைக் காப்பது யோகம்
செல்வத்தை யீவது யோகம் - உயர்
சிந்தனைச் சிற்பியாய்த் திகழ்வது யோகம்

மோகத்தை முனிவது யோகம் - ஜீவன்
முத்தியைப் பெறுவது யோகம்
ஏகத்தைக் காண்பது யோகம் - தன்னுள்
இயல்புற வாழ்வதே யோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சிற்பக்கலை

# ஆழ்ந்த உண்மையை விளக்கும் ஆனந்த சிற்பங்கள்

பாயங்கள் நூலின் மூற் பகுதியிலுள்ளன) பெரும்பாலும் சைவச்சார்பாக இருக்கக் காரணம் இந்தியா முழுவதிலும் வைணவம், உயர்ந்த ஆழமான உணர்ச்சிப் பெருக்குள்ள கவிதைகளை வழங்கியுள்ளதுபோல் சைவம் கம்பீரமான குறிப்புப் பொருள் செறிந்த வடிவங்களை ஆக்குவதில் சிறந்துள்ளது. இந்நூல் மிகுந்த செலவில் தயாராகியுள்ளது. தற்போது நாம் அறிந்துள்ள நிலையில் இத்தவகையான ஒரு நூல் எவ்வளவு நன்றாக இருக்கமுடியுமோ அவ்வளவு நன்றாக உள்ளது எனக் கூறலாம்.

### ஸ்ரீகங்கோலி நூலில்

ஸ்ரீ கங்கோலி இந்நூலில் சேகரித்துத் தந்துள்ள 94 படங்களும் (Plates) தென் இந்தியாவின் செப்புப் படிமங்களின் எல்லா வகைகளையும் விளக்குகின்றன. முதலில் உள்ளது காலசம்ஹாரர் அதைத் தொடர்ந்து சைவக்கலையின் சிறப்பு அம்சமான பல நடராஜாக்கள் அதில் பல்வேறுவகைகள், புகழ்பெற்ற சிவனடியார்கள் படிமங்கள் சில உள்ளன. வைணவக்கலையின் எடுத்துக் காட்டுகளும் சில தரப்பட்டுள்ளன. எல்லா மாதிரிகளும் இருக்கும்படியாக செய்யப்பட்ட இவ்வளவு பெரிய சேகரிப்பில் தரத்தில் சிறிது குறைந்தவை பல இருப்பது இயற்கையே. ஆயினும் மொத்தத்தில், பெருமளவான மனதில் பதியும்படியான அருளாவேசம்கொண்ட படைப்புக்களைக் காணும் உணர்ச்சியே உண்டாகிறது. அதோடு சேகரிப்பு முழுவதிலும் இந்தியக் கலையை வேறெந்த மேற்றிசை கீழ்த்திசை கலையிலிருந்து பிரித்துக் காட்டும் தனித்தன்மை மேலோங்கி நிற்கிறது. எல்லாக் கீழ்த்திசை கலையின் தன்மையும்உள்ளத்து உணர்ச்சிகளையும், புலன்களையும் தாண்டிச் செல்வதுதான். ஒரு புத்தருடைய சிலையோ அல்லது தீங்கொழுந்து போன்ற ரோமமுடைய இடியேற்றின் அதிதேவதையின் வடிவமோ எப்படி மெய்ப்பொருளை விளக்குகிறதோ அங்ஙனமே குன்றையும் வெண்பனியையும் காட்டும் ஓர் ஜப்பானிய இயற்கைக் காட்சி ஓவியமும் ஆன்மாவின் ஒரு பிரதிபிம்பமேயாகும். இயற்கை அதில் தன்னையே ஒரு கண்ணாடியில் பார்ப்பதுபோல் காணமாட்டாள். அதுதானல்ல என்னும்படி அதிசய மாற்றம் அடைந்த ஒன்றாய் காண்பாள். ஆனால் அந்த ஒன்று அவளது ஆழ்ந்த உண்மை மெய்ப்பொருளேயாகும். எனினும் இந்தியக் கலைக்கும் பிற கீழ்த்திசைக் கலைக்கும் ஒரு வேறுபாடு உளது பிற கீழ்த்திசைக்கலை புறத்தோற்றத்திற்கு அப்பால் சென்றாலும் பிரபஞ்சத்திற்குள்ளேயே பிரகிருதியின் எல்லைக்குள்ளேயே நின்று விடுகிறது. ஆனால் இங்கோ எப்பொழுதும் அவற்றையெல்லாம் தாண்டி சார்பற்ற தனிப்பொருளாய் உள்ள, ஆனந்தமான. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றை இறைவனின் ஆனந்தத்தையே எட்டிப்பிடித்து விடுகிறது. வேலைநுணுக்கம் குறைந்த ஜீவத்துடிப்பில்லாத, சாதாரண வேலையிலும் மேற்குறித்த சாயல் உள்ளது; அது அதன்வேலைத் திறனுக்கு உரியதற்கும் அதிகமான பெருமையை அதற்கு கொடுத்து விடுகிறது; எந்தச் சிற்பமும் வெறும்வேலை நுணுக்கத்தை மட்டும் காட்டுவதாக அமைவதோ அல்லது முற்றிலும் சடத்திலும் புறத்தோற்றத்திலும் இறங்கிவிடுவதோ பெரும்பாலும் இல்லை. ஆசிரியர் நன்கு விளக்குவது போல, இந்தத்தன்மையே, சராசரி ஐரோப்பிய மனம் இந்தியக்கலையைப் புரிந்து கொள்ளாமலிருப்பதற்கும், அதிலிருந்து பின்வாங்கிச் (விலகி) செல்வதற்கும் காரணம் ஒருவகையில் நியாயமான காரணந்தான்; ஏனெனில் அது கலையினிடத்தில் கோருவது புலன்களின், மனித உணர்ச்சிகளின், பழக்கப்பட்ட விஷயங்களில் சஞ்சரிக்கும் கற்பனையின் திருப்தியே. அது ஒரு தெய்வத்தையோ உலகாதீதப்பொருளின்குறியீட்டையோ கேட்கவில்லை; அணுப்பிசகாது அற்புதமாக அப்படியே இயற்கையை வடித்துக்காட்டும் ஓர் உருவம்சாதாரணமனித அனுபவத்திற்குள் அடங்கிய காட்சி, கற்பனை, உணர்ச்சி, கருத்து இவற்றின் சூசனை (குறிப்பு) இவைகளையே கேட்கின்றது. இந்திய கலைஞன் தீர்மானமாக வேண்டுமென்றே இந்தக் கோரிக்கைகளையெல்லாம் அசட்டை செய்கிறான். அவனிடம் திருந்திய தொழில் நுட்பம் உள்ளது, உருவவளைவுகளை பூரண நிபுணத்துவத்துடன் அடிக்கடி ஒப்பற்ற வசீகரத்துடனும், இனிமையுடனும், மென்மையுடனும் கையாளுகிறான்.

எப்பொழுதும், அந்தராத்மாவையும், அந்தராத்மா தனது தூயதன்மையால் வெளிப்படும்படியான மனநிலை, இதயநிலை, அற்பமானவை, நிலையற்றவை, குழம்பியவை, அமைதியற்றவை ஆகிய மாசுகளின்றி மூலஜீவனை ஒளிரச்செய்யக்கூடியதான மனத்தின், இதயத்தின் தூயசார்பற்ற நிலைகளை வெளிப்படுத்தவே பெருமுயற்சி செய்கின்றனர். அவர்களுடைய மனிதவடிவங்களிலெல்லாம் பக்தியே



ஸ்ரீ அரவிந்தர்

வெளிப்படுகின்றது. ஏனெனில் சைவ, வைணவசமயக் கோட்பாட்டின்படி இதுவே இறைவன்பால் திரும்பிய ஆன்மாவின் தூயநிலை. கலைஞனின் ஆற்றல் அசாதாரணமானவை. முகம், கண்கள் கொள்ளும் கோலம் மட்டுமல்ல உடல் முழுவதும் ஒவ்வொரு நெளிவும் ஒவ்வொரு சிறு அம்சமும் உத்தேசித்த விளைவை (Effect) உண்டாக்க உதவுகின்றன. அவை பக்தியின் இலட்சணங்களான வழுத்துதல், துதி, கீழ்ப்படிதல், பரவசம், அன்பு, இனிமை ஆகியவற்றின் சாரத்திலேயே ஒன்றியுள்ளன. இவைகள் பக்தர்களது வடிவங்களல்ல. பக்தியின் மூர்த்தங்களே. யாம் இந்த

## அருளாவேசம் கொண்ட படைப்புக்களைக் காணும் உணர்ச்சியேயுண்டாகிறது

### உண்மையை விளக்குவன

அவனது வடிவங்களின் லயம், இயக்கம் இவை உயிரும் சக்தியும், முழுமையும் உடையனவாய் அறிவு நிர்ணயம் அதிகமாகவும் உள்ளொளி குறைவாயும் உள்ள ஐரோப்பிய பாணி சிற்பங்களின் அங்கலட்சணங்களும் தொகுதிச் சிற்பங்களும் உணர்த்துவதைவிட ஆழ்ந்த உண்மையை உணர்த்துகின்றன. ஆனால் கூர்ந்துநோக்குவோமானால் இந்த உடல்கள் மனிதமாமிசத்தின், மனித வாழ்வின் செப்புப் பிம்பங்கள் அல்ல, தெய்வவாழ்வின் வடிவங்கள், உடல் எடுத்த தெய்வங்கள் இவை மனித மாதிரியை (Type) விஞ்சியவை; சில சமயங்களில் மனிதஉடலுக்குப்பதில் அதிநுட்பமான ஆன்மீக அழகுடைய ஓர் உடல்கொடுக்கப் படினும் பல சமயங்களில் வெறும் உட[illegible] யுடன் அலட்சியம் செய்யப் படுகிறது.

உயிருள்ள வடிவம்கொண்ட பரவசம் இந்திய மனதைப் பற்றிக்கொண்டு அதன் ஜீவனின் வேர்க்கால்கள் வரை ஊடுருவிச் செல்கின்றதெனினுமே மேல்நாட்டுமனம் இதைப்போல் ஆன்மீகப்பண்பாட்டில் பயிற்சிபெறாத காரணத்தால் இவ்வடிவத்தின் உட்பொருளை முற்றிலும் தவறவிட்டுவிட்டு பிரார்த்தனை செய்யும் மனிதன் என்ற அளவிலேயே புரிந்து கொள்ளும். அதற்குக் காரணம் நாம் தெய்வங்களின் வடிவங்களை ஆராயும்போது தெளிவாகத் தெரிகிறது இந்தத்தெய்வங்கள் தெய்வத்தைப்பற்றிய கிரேக்க கிறிஸ்தவக் கருத்துக்களிலிருந்து மிகவும் வேறுபட்டவை. அவைகள் உலகத்தில் வாழ்பவைகளே அல்ல, அவை தம்மிலேயே ஆனந்தத்திலேயே வாழ்கின்றன. வடிவம் என்பது ஜீவனாகிய கடவுள் தன்னை முழுவதும் வெளிப்படுத்திக்கொள்ளும் ஓர் அலை எனலாம். [illegible]

காணமுடியாத சிந்தனையாயிருக்கும் இன்னொரு சமயம் தெய்வீக வாழ்வின் சுயபூரணமான சக்தியின் கடல் போன்றகொந்தளிப்பு. பிறிதொரு சமயம் பூரணமான அமரானந்தம். ஆனால் எப்பொழுதும் வடிவத்தை அல்ல வடிவத்தினூடு வடிவத்தினுள் அதைத் தனதாக்கி அதற்கு உணர்வூட்டியுள்ள ஒன்றைக்காணவேண்டும். உண்மையில் இக்கலை மனிதஆன்மாவை பரம்மான்மாவுடன் தொடர்புகொள்ளவே அழைக்கின்றது. அதன் அழைப்பு அறிவுக்கோ கற்பனைக்கோ புறக்கண்ணுக்கோ அல்ல. இது புனிதமான பழமையான மரபுடைய கலை இந்திய மெய்ப்பொருள் கொள்கையின் ஆழ்ந்த சிந்தனையையும் இந்திய வழிபாட்டின் தீவிர உணர்ச்சியையும் [illegible] விளக்குவதாக அமைந்தது உணரக்கூடிய ஜீவனுக்கும் காணும் திறன் படைத்த கண்ணிற்கும் புலன்களுக்கு அப்பாலுள்ளவற்றின் பெருமதிப்பைப் படம்பிடித்துக் காட்டுதற்கும் நாடுகின்றது. ஆனாலும் பெரும்பாலான இந்த செப்பும் படிமங்களை இவற்றிற்கு முந்திய காலத்தைச்சேர்ந்த வியப்பூட்டும் கம்பீரம் கொண்ட கற்சிலைகளிலிருந்து பிரித்துக்காட்டும் ஒரு தனித்தன்மை இருப்பதைக் காணலாம். வடிவத்திலுள்ள இசைத்தன்மை அதன் ஆதார சுருதியாக அமைந்த ஜீவன் வசீகரம் லயம் இவற்றிலேயே அந்தத் தனித்தன்மை இருப்பதைக்காணலாம். வடிவத்திலுள்ள இசைத்தன்மைஅதன்ஆதார சுருதியாக அமைந்த ஜீவன் வசீகரம் லயம் இவற்றிலேயே அந்தத்தனித்தன்மை உள்ளது. இந்திய மெய்ப்பொருள் கொள்கையின் மொழியில் சொல்லவேண்டுமானால் பெரும்பாலான கலை பிரகிருதியின் ஆடலையே விளக்குகிறது. பௌத்தக் கலை அதன் தனித்தமையை பிரதிபலிக்கும் படைப்புகளில் புருஷனின் பூரண அமைதிநிலையை விளக்குகிறது. இந்துக்கலை புருஷன் பிரகிருதி இரண்டையும் ஒரே வடிவில் இணைக்க முயல்கிறது. ஆனால் பழைய கற்சிலைகளில் உக்ர கோலங்களில்கூட மூர்த்தியின் அற்புத சாந்தம் அமைதியான ஆற்றல், கம்பீர ஏகாக்கிரஹம் (Concentration) ஒரு முனைப்பாடு - இவற்றையே வடிவம் முழுவதும் பிரதானமாக எடுத்துக்காட்டும் இயக்கம் உள்ளடக்கி அமைதிக்குக் கீழ்ப்பட்டு நிற்கும். இதே தன்மையை உந்தச்செப்புபடிவங்கள் சிலவற்றிலும் காண்கிறோம். குறிப்பாக காலசம்ஹார சிவனின் கம்பீர, அமைதி கொண்ட சித்தசக்தியிலும் ஆற்றலிலும் காணமுடிகிறது. ஆயினும் வெளிப்படையாக இயக்கம் குறிக்கப்படாமலிருக்கும் போதும் ஜீவனும் லயமுமே மேலோங்கி நிற்கின்றன. இக்கலையின்முதன்மை இடத்தை வகிக்கும் நடராஜ விக்கிரகங்களின் கருப்பொருளும் இதுவே. உள்ளே தன்னுள் ஆழ்ந்த ஏகாக்கிரகம் (ஒருமுனைப்பாடு) அசைவற்ற சாந்தி, இன்பம். புறத்தே வில்லை இயக்கத்தின் ஆனந்த வெறி. உட்கார்ந்தகோலத்திலோ நின்ற கோலத்திலோ உள்ள பிற வடிவங்களும் இந்த ஆனந்த நடனத்தின் இடையில் ஏற்படும் சிறு ஓய்வையே குறிப்பவைகளாகத் தோன்றுகின்றன. பெரும்பாலும் சிந்தனையும் அமைதியும் கலையிலும் முகத்திலும் குவிந்துள்ளன. உடல் உள்ளாழ்ந்த இயக்கத்தின் துடிப்பை வெளியிடுகிறது. இந்தக்கலை (செப்புப்படிவங்கள்) ஆழ்வார், நாயன்மாரின் இணை வெள்ளமாய் பெருக்கெடுத்த பக்திப் பாடல்களின் செப்புப் பிரதிபலிப்பாகவே தோன்றுகின்றது பழைய சிற்பங்களெல்லாம் புத்தர்கால ஆன்மீகத்திலிருந்து கிளர்ந்தவையாகவோ அல்லது உபநிடதங்களின் காட்சிகளைக் கல்லில் பிரதிபலிப்பவையாகவோ இருந்தன. புத்துயிர் பெற்ற இந்தியக் கலையின் குறிக்கோள் இப்பெரும் சிறப்புக்கூறுகளின்சாரத்தையெல்லாம் மீட்டு அத்துடன் வரும் யுகத்தின் ஆன்ம விளக்கத்தின் சுதந்திரத்தையும் பல் வளத்தையும் கூட்ட வேண்டும். வரும் யுகத்தில் அனந்தப் பொருளைத் தேடும் மனித முயற்சி குறிப்பிட்ட சில வகைகளில் கட்டுப்பட்டுக் கிடக்கவோ ஒன்றிரண்டு பெரும் வழிகளில் மட்டும் அடங்கிவிடவோ வேண்டியதில்லை. வாழ்வின்பின் நிற்கும் இரகசியப்பொருள் தன் குழந்தைகளுக்கு விடுக்கும் பலவாறுன அழைப்பை பல்வேறு முறையில் உவகையுடன் வெளியிடும் சுதந்திரம் அளிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

நூலில் உள்ள சிறு சிறு குறைபாடுகளை ஆசிரியருக்கு எடுத்துக்காட்டுவது கடமை என்று உணர்கிறோம் நூலில் சிற்பக்கலையின் விதிகளையும் மரபுகளையும்பற்றிக் கூறும் அகஸ்தியர் முதலியோரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் அச்சேறாத பல சமஸ்கிருத நூல்களிலிருந்து ஏராளமான மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. ஆனால் கங்கோலி அவர்கள் பின்பற்றியுள்ள ஒலிப்பெயர்ப்பு முறையினால் அவற்றின்பயன் சற்றும் குறைந்துள்ளது. அவர் இந்தியா முழுவதற்குமாகவும் ஐரோப்பாவிற்காகவும் எழுதுகிறார். பின்னர் ஏன் சமஸ்கிருதத்திலுள்ள 'b'க்கும் 'u'க்கும் உள்ள வேறுபாட்டைக் கவனியாத இலக்கணப் பிழையான வங்காள முறையைப் பின்பற்றவேண்டும்? அதற்கும்மேலாய் 'bh' உச்சரிப்புக்குச் சமமாக ஆங்கில 'u' போடும் அவலட்சணமான பித்துக்குளித்தனத்தை ஏன் பின்பற்றவேண்டும்?

இந்தத் தவறுகளில்கூட ஆசிரியர் ஒரேமாதிரியாக இல்லை. சமஸ்கிருத 'ப' க்கு சிலவேளைகளில் bயும் சில 'uh'க்கு இஷ்டம்போல u vh, or bh உபயோகிக்கிறார். இத்தகைய இஷ்டம்போலச் செய்யும்போக்கு குழப்பம் தருவதாகவும், ஒழுங்குவிதியம் ஆகியவற்றை அவமதிப்பதாகவும் உள்ளது ரோமன் எழுத்துக்களில் சமஸ்கிருதத்தைப் படிப்பதே கடினம், ரோமன் எழுத்துக்கள் அத்தக்காரியத்துக்கு கொஞ்சமும் பொருத்தமானவையல்ல ஆனால் இந்தமாதிரியான முறை அல்லது முறையின்மை கடினத்தை அநேகமாக அசாத்தியமாகவே ஆக்கிவிடுகின்றன. ஸ்ரீகங்கோலி நமக்கு அளித்துள்ள பல்லவச் சிற்பங்கள், தென் இந்தியச் சிற்பங்கள் பற்றிய முக்கியமான நூல்களில் இந்தச்சிறு குறையை

(6-ம் பக்கம் பார்க்க)

(South Indian

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சிற்பக்கலை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கிவிடுவார் என்று நம்புகிறோம்.

முன்னுரையின் முதல் அத்தியாயம் தென் இந்தியக்கலையின் தோற்றம்பற்றிய செவிவழி வரலாற்றைக் கூறுகின்றது. அது சுவையுடையதாகவும் பயனுள்ளதாகவும் இருக்கின்றது. ஆனால் அவர் நம்பிக்கையுடன் கூறும் சில திடுக்கிடும் கூற்றுக்களை நமது திறனாய்வு உணர்வு ஏற்கமறுக்கின்றது. எடுத்துக்காட்டாக "இந்திய மக்களாகப் பிரிக்கப்பட்ட இந்நாட்டின் இருபிரிவுகளிலும் வாழும் மக்கள் இரத்தத்திலும் மனஇயல்பிலும் அடிப்படையான வேறுபாடு உடையவர்கள் என்பதில் ஐயத்திற்கு இடமில்லை" இதற்கு மாறாக இந்திய ஜாதி முழுவதும் திராவிட இரத்தத்தைக் கொண்ட ஒரே இனம் என்றும் அல்லது இந்திய ஜாதியின் மூலம் ஆரியரா, ஆரியரல்லாதாரா என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் இந்தியா முழுவதும் - தெற்குக் கடற்கரையிலுள்ள சில தீவுகளில் வசிப்பவர்களையும், இமயமலைப்பகுதியில் வசிக்கும் மங்கோலிய இனத்தவரையும் தவிர ஒரேமாதிரி லட்சணங்களையுடைய ஒரே இனத்தவராவர் என்றும் உள்ள முக்கியம் வாய்ந்த எழுத்துக்களை கங்கோலி அவர்கள் அவ்வளவு எளிதில் புறக்கணிக்கமுடியாது. இப்பிரச்னை மிகவும் தெளிவற்றும் ஐயப்பாடுடையதாகவும் உள்ளது. ஓர் உண்மை நிலைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இருவேறு பண்பாடு பண்டைய இந்தியாவில் இருந்தன என்பதே அது. சூரியவழிபாடு, அக்கினிவழிபாடு, சோமயாகம் இவற்றைக்கொண்ட பஞ்சாப், வடஇந்தியா, மத்திய இந்தியா, ஆப்கானிஸ்தானம் ஒருவேளை பாரசீகத்திலும் கூடப்பரவியிருந்த 'ஆரியமல்லாத' பண்பாடு 'ஆரியமல்லாத' மற்றப்பண்பாட்டைப்பற்றி நமக்குக் கிடைத்துள்ள சிதறிய குறிப்புக்களைக்கொண்டு ஒன்றும் உறுதியாகக் கூறஇயலாது.

மேலும் அகஸ்திய சாஸ்திரங்கள் என்று அழைக்கப்படுபவைகளை இயற்றியவர் அதேபெயருடைய வேதரிஷி என்றுகூறும் செவிவழிச் செய்தியை ஸ்ரீகங்கோலி ஒப்புக்கொள்வதுபோல் தோன்றுவதைக் காண ஆச்சரியப்படுகிறோம். இந்நூல்களைப் புத்தர்காலத்திற்கு முந்தியவை என்று ஸ்ரீகங்கோலி சொல்வதற்குப் போதிய ஆதாரம் இல்லை. இவற்றிலிருந்து தரப்பட்டுள்ளமேற்கோள்கள் பிந்திய காவியகால சமஸ்கிருதத்திலுள்ளன. நிச்சயமாக அவை கிறீஸ்தவ சகாப்தத்திற்கு முந்தியவையல்ல பிந்தியவை. இந்த சாஸ்திரங்கள் லோபமுத்திரையின் கணவரான ரிக்வேதம்முதல் மண்டலத்தின் இறுதியிலுள்ள ஏராளமான பாடல்களை இப்பொழுது வழக்கொழிந்துபோன பண்டைய மொழியில் பாடிய ரிஷியினால் இயற்றப்பட்டவை என்று நம்பவே முடியாது. அதேபோல் மன்னுயிர்க்கெல்லாம் பிதாவான புராணங்களில் கூறப்படும் பிரஜாபதியாகிய காஸ்யபரும் வைசேஷிக தத்துவத்தைக்கண்ட கணாதரும் ஒருவரேயென்று கூறும் ஆச்சரியமான முடிவையும் ஏற்க முடியாது. நம்நாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு எவ்வளவோ வாய்ப்பிருந்தும், சில ஐரோப்பியப் பண்டிதர்களைப் பின்பற்றி அவர்களது ஆதாரமற்ற விநோத கற்பனைகளை ஏற்றுக்கொண்டு அத்துடன் நிச்சயமற்ற சிதறிய சான்றுகளின் அடிப்படையிலும் வரலாற்றுக்கு முந்திய காலத்தைப்பற்றிய அவர்களின் கற்பனை 'வரலாற்றின்' அடிப்படையிலும் மேற்கட்டடத்தை எழுப்புவதைக்காண வேதனை உண்டாகிறது. இதைவிடத் திறமையான உறுதிவேலை செய்ய வேண்டும். இந்தியர்கள் அதை அற்புதமாகச் செய்யலாம். ஸ்ரீகங்கோலியின் இந்த நூலே அதற்குச் சான்று. ஏனெனில் இவ்விடைக்கூற்றுக்களைத் தவிர்த்து இந்நூல் அற்புதமாகவும் அம்சமுக் கற்றும் உள்ளது. இதன் தெளிந்த அறிவும் அடக்கமும் உறுதியான கூற்றுக்களும், ஒருவகைச் சிக்கனத்துடன் வேண்டிய விவரங்களையெல்லாம்தரும்தன்மையும் இதை இத்தகைய நூல்களுக்கு நிகரற்றதாக்குகின்றன [illegible]

முற்றும்.

# பஞ்சாமிர்தம்

## எளிமையின் இனிமை

சொந்த உடைமைகள் கால்விலங்கு போன்றவை. சொகுசுப் பொருட்கள் வாழ்வுக்கு இன்றியமையாதவை அல்ல. அவை மானிடரின் ஈடேற்றத்திற்கு இடையூறாயிருப்பவை. எல்லா விஷயங்களையும் இரண்டு மூன்று என்ற கணக்கிற்குள் வைத்திருக்கவேண்டும். நூறு ஆயிரம் என்றல்ல. வரவு செலவுகள் விரல்விட்டு எண்ணக்கூடியவையாய் இருக்கவேண்டும். எளிமையான வாழ்க்கை இணையற்ற தைரியத்தையும் சக்தியையும் இனிமையையும் அளிக்கும்.

—அமெரிக்க தத்துவஞானி தோரோ

## கேள்விஞானம்

பெரும்பாலானவர்களின் பேச்சுவேகம் நிமிடத்துக்கு 125 சொற்கள். ஆனால் சிந்திக்கும் வேகம் நிமிடத்துக்கு 500 சொற்கள். ஒருவர் பேசுவதை நாம் கேட்டுக் கொண்டிருக்கும்போது, நிமிடத்துக்கு சுமார் 400 சொற்களை சிந்திப்பதற்கு எமக்கு நேரமிருக்கிறது. பேசப்படும் விஷயத்தை கவனமாகக் கேட்காவிட்டால் எமது சிந்தனை அடிக்கடி எங்கெங்கேயோ உலாவிவிட்டு மறுபடியும் பேச்சுக்கு வந்துகொண்டிருக்கும். இதனால் பேசப்படும் விஷயம் முழுவதையும் நாம் கிரகிப்பதில்லை. புத்தகத்தைச் சிலர் வாசிப்பார்கள். சிலர் படிப்பார்கள். அதுபோல் பேசுவதையும் சிலர் ஒரு காதால் வாங்கி மற்றக்காதால் விட்டுவிடுவார்கள். சிலர் பேசப்படும் பொருளை முழுமையில் கிரகித்துக்கொள்வார்கள். சிலர் ஒருவருடைய பேச்சை ஐந்துநிமிடம் கேட்டுவிட்டு அலுத்துப் போவார்கள். வேறு சிலர் பொறுமையுடன் இருந்து பேசுபவர் ஏதாவது புதிய விஷயத்தைச் சொல்வாரோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். "எப்பொருள் யார் யார்வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

## முத்துவின் நாய்கள்

(1) முத்துவின் நாய்கள் எல்லாம் கறுப்பு. (2) முத்துவின் நாய்களில் ஒன்றோ அல்லது ஒன்றுக்குமேலோ கறுப்பு (எல்லாம் அல்ல). (3) முத்துவின் நாய்களில் ஒன்றோ ஒன்றுக்குமேலோ கறுப்பல்ல.

இந்த மூன்று வாக்கியங்களில் ஒரு ஜோடியை எடுத்துக்கொண்டால் அவை இரண்டும் உண்மையாக இருக்க முடியும். ஆனால் இரண்டும் பொய்யாக இருக்கமுடியாது. மற்றொரு ஜோடியை எடுத்துக்கொண்டால் அவை இரண்டும் பொய்யாக இருக்க முடியும். ஆனால் இரண்டும் உண்மையாக இருக்க முடியாது. அந்த ஜோடிகள் எவை? [விடை கீழே]

## நங்கையரின்

## பொங்கும் எழில்

ஜேர்மன் நங்கையர் சமையல் அறையில் எழில் பொங்குவார்களாம். ஆங்கிலப் பெண்கள் விளையாட்டுப் பந்தயங்களிலும் பிரெஞ்சு மங்கையர் உணவு விடுதிகளிலும், அமெரிக்க அணங்குகள் நீச்சல் தடாகத்திலும் தங்கள் எழில் வண்ணத்தோடு தோற்றமளிக்கிறார்கள் என்று கூறுவதுண்டு. நமது தமிழ்ப் பெண்மணிகள் எவ்விடத்தில் சிறப்பாகக் காணப்படுகிறார்களென்று கேட்டால் 'ஆராரோ ஆரிவரோ' என்று தாலாட்டுப் பாடும் தொட்டிலுக்கருகில்.

## வாழ்க்கையின் நோக்கம்

"சுவாமியார் வாழ்க்கையின் நோக்கம் என்ன?" என்று ஒருபெண் கேட்டாள். இது எல்லா சுவாமிமாரையும் எல்லாப் பெண்களும் கேட்கும் கேள்வி. இந்த சுவாமியார் அதற்கு ஒரு மறுமொழி தயாராகவே வைத்திருந்தார்.

"கடவுளை அறிந்து கொள்வதற்கு" என்று பதில் சொன்னார்.

நீர் அறிந்து கொண்டீரா?"

"இல்லை; ஆனபடியால்தான் நான் சுவாமியாராய் இருக்கிறேன்."

(முத்துவின் நாய்கள் இரண்டும் மூன்றும் உண்மையாக இருக்கமுடியும். ஆனால் இரண்டும் பொய்யாக இருக்கமுடியாது. ஒன்றும் இரண்டும் பொய்யாக இருக்கமுடியும். ஆனால் உண்மையாக இருக்க முடியாது.)

—தயாரிப்பு: வழிப்போக்கன்

# காளிதாசன் கண்ட கோடை

'அப்பப்பா, என்ன வெய்யில்; கொளுத்துகிறதே' என்று சொல்லிக்கொண்டே நுழைந்தார் நண்பர். 'இன்றென்ன, எப்பொழுதுமே இம்மாதத்தில் வெய்யில் இப்படித்தானே' என்றுசொல்லி வாசிப்பதை நிறுத்திவிட்டு, அவரை ஏறிட்டு நோக்கினேன். வெளராவத்தின் இன்னமான சால்வையை விசிறியாக்கிச் சீனடி சிலம்படி ஆடுபவர் போல அதை இங்குமங்கும் சுழற்றி காற்று உண்டாக்க முயன்றுகொண்டிருந்தார் அவர். என்மனம் காளிதாசனின் இருது சம்மாரத்திலவரும் கோடைகால வர்ணனையை நினைத்துக்கொண்டது. ஒவ்வொருவரும் அவ்வவருடைய வெப்பமே கொடுமையிற் கூடியது என்று கூறுவது இயற்கை. அதுவும் கற்பனைச் சுனையாகிய காளிதாசர் கோடையின் கொடுமையைக் கூறுவதென்றால்,

**ஏ. ராமச்சந்திர சர்மா**
**பி. ஏ. (ஆனர்ஸ்) லண்டன்**

அக்கொடுமையிலும் ஓர் இன்பம் ஊற்றெடுக்கின்றது.

தகிப்பதனால் என்னவோ 'தாகம்' உண்டாகிறது. அது போன்று 'தப்' என்ற வினையடியினின்றும் 'தாபம்' என்ற சொல் உண்டாயிற்று. காளிதாசனின் கோடைகால வர்ணனை, அன்றும், மக்கள் கோடையின்தாபத்தைப்போக்க எவ்வகையில் முயன்றனர் என்பதை உரைக்கின்றது. குளிர்ச்சிதேடி எல்லா உயிரினமுமே அலைகின்றன. ஆதவனின் சிற்றத்தைச் சமனப்படுத்துவான்போன்று தண்ணெனக் குளிர்கின்றது. பசும்பொய்கை வெளியிற்படும்போதெல்லாம் இன்பம் பயக்கும் தண்ணீரை உடையது அது. இக்காலத்தைப்போன்று வேறெக்காலத்தும் நீரின் அருமை நமக்குத் தெரியாது. மாலைவேளை. மேலே வண்ணஒடம்போல் தண்ணென்று விதிமிதக்கின்றது மதி. வெய்யிலின் கொடுமைக்காற்றாது உச்சயினிநகர இல்லங்களில் ஜலயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. சுவர்களிற் குளிர்மையை உமிழும் தன்மைவாய்ந்த நன்மணிகள் பதிக்கப்பட்டுள்ளன. இவ்வில்லங்கள், குளிரூட்டிய இன்றைய இல்லங்களை நினைவூட்டுகின்றன. வீசுதென்றலை விழைந்து ஆடவரும் அரிவையரும் உப்பரிகைகளுக்கு விரைகின்றனர். ஆடவரின் தாபத்தைப் போக்கப் பெண்கள் தம் அன்புடன், மதுவை ஒன்றுசேர வார்த்து, அதை முதலில் தாமே சுவைத்துத் தமது காதலருக்கு வழங்குகின்றனர். காதலியரின் மூச்சினூற்றளம் புகின்ற அம்மதுபோல ஆடவரின் உள்ளங்களும் ஆடுகின்றன. இது அடங்கியிருந்த மன்மதனுக்குச் சவால் விடுவது போன்றிருக்கிறது. என்னே கவியின் கற்பனை. இம்மட்டோ. ஆதவன் நீண்ட நெடுவானின்மீது தனது பவனியைத்தொடர, உடல்கள் கனக்கின்றன: அகத்தின் சந்துகளில் எரிவு உண்டாகிறது. அதைப் பொருது வனிதையர், ஆடைகளைத் துவையகற்றித் துயர் தராத மென்துகில் சேர்த்தார் என்கிறார் கவிச்சக்கரவர்த்தி காளிதாசன். (சமுத்க ஸவேதாசிதாங்கசந்தயம் விமுச்சிய வாசாம்சிகுருணிசாம்பிரதம் என்று தொடங்கும் சுலோகத்தில் இக்காட்சி இடம்பெறுகின்றது.)

இனி சமாசரங்களை எவ்விதம் கோடை பாதிக்கின்றதென்பதைக் காளிதாசர் கூறுவதைச் சற்று நோக்குவோம். காய்கதிர் செல்வன் பூமியைச் சினந்து நோக்குகிறான். சுழல்காற்று மண்ணை வாரியடிக்கிறது. கால் கீழே படாதவாறு சாடுகிறது மணல். சுடுமணல்கண்முழித்துப் பார்க்கமுடியாதவாறு செங்கோல் செலுத்துகிறது வெப்பம். இதேவேளை தளர்வுற்ற நாவுலர்ந்து வளைந்து செல்கிறது பாம்பு ஒன்று. பூமியை அரவணைத்துச் செல்லும் அதற்கல்லவா தெரியும் பூமியின் வெப்பம். 'என் விதி இப்படியா?' என நொந்துகொள்வதுபோலக்கண்கோர நிழல் தேடிச் செல்லும் அந்நாகம் தனது பகைவன் என்றும் பாராது மயிலின் கலாபத்திடை ஒதுங்குகின்றது. அம்மஞ்சையும் ஓமத்தீயின் நாக்குகளையொத்த பரிதியின் கிரணங்களுக்கு ஆற்ற

[9-ம் பக்கம் பார்க்க]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கை—சமுத்திரக் கரையோரமாகவுள்ள வளமிகு மூதூர் தந்த பிரபல கதாசிரியரும் என் இலக்கிய நண்பருமான வ. அ. ராசரத்தினம் முன்பொரு சமயம் ஒரு கவிதை எழுதி எனக்கு அனுப்பியிருந்தார். கொத்தமங்கலம் சுப்பு பாடிய 'வேட்டை முடிஞ்சு போச்சு தம்பி வீட்டுக்கு வாங்க' என்ற புகழ்பெற்ற கவிதையைத் தழுவியதாக இராணுவப் படையில் சேர்ந்தவர்களைத் தாய்நாடு அன்புடன் அழைக்கும் பொருள்பட அக்கவிதை கிராமிய நடையில் எழுதப்பட்டிருந்தது. 'மூதூர் ராசா' என்ற புனைபெயரில் அப்பாடல் அந்நாளில் நான் நடத்திய என் சொந்தப் பத்திரிகையில் பிரசுரமாகி, பலரது பாராட்டுதலையும் பெற்றது. அதில் ஒரு மூன்று செய்யுட்களை இங்கு தருகிறேன்.

வேலை முடிஞ்சு
போச்சாமப்பா
வீட்டுக்கு வாங்க
உங்க சேவையினித்
தேவையில்லையாம்
வீட்டுக்கு வாங்க
இராப்பகலா உழைச்ச
தெல்லாம்
ரவையும் விடாம
சாப்பிக்கவட்டக்காறன்
மடில கொட்டி விட்டடங்க

மாப்பிள்ளை போல
சோகுப் பண்ணி
மறைந்திருந்தீங்க
மடியிலொரு
கனமுமில்லே
வீட்டுக்கு வாங்க

[2]

வீடுவாசல் நீங்க இல்லே
வெறிச்சென்டு போச்சு
வெசனம் கொண்டு மனைவி
மக்கள் வெம்பிடலாச்சு
ஆடு மாடு [illegible]யில்லாம
அழிஞ்சிடலாச்சு-இந்த
அடிமைத் தொழிலை
எறிஞ்சுபோட்டு
வீட்டுக்கு வாங்க

[3]

கந்தளாயிக் குளத்தில
நீர் கரைபுரளுது
கங்க மாவேலி நதி
பொங்கி வருகுது
வந்தனை நாம் செய்வோம்
கோஷம் வானில்
முழங்குது-பனி
வாக்குப் பலிக்கும்
காலமப்பா
வீட்டுக்கு வாங்க

0 0 0

மூதூர் கிழார் பற்றி இன்னும் இரண்டு வார்த்தை சொல்ல ஆசை. சிங்களம் சேர்ந்த தமிழ் பெருமக்கள் 1956 வகுப்புக் கலவரத்தில் கெட்டு நொந்த சத்தம் தாயகம் திரும்பிய காலை இந்தத் தமிழ் எழுத்தாளர்

# வெள்ளி மல்லிகை

# மாணிக்கப் பொன்மயிலாள்

கங்கைப் பிரவாகமான தமிழுணர்ச்சியுடனே மகா துணிச்சலுடன் பத்திரிகையில் பகிரங்கமாக அன்னவருக்குப் புதுவாழ்வு நம்பிக்கை' யளிக்கும் ஓர் அழைப்பு விடுத்தார். யாழ்ப்பாண சகோதரர்கள் கண்ணீர் இறைக்கும் ஒரு சின்ன இயந்திரம் மட்டும் கொண்டு எங்கள் ஊருக்கு வாருங்கள் வேறு ஒன்றும் வேண்டாம். இந்தக் கங்கைநதிப் பூமி அதன்பின் மகா வலிமை படைத்தவர்களாக உங்களை ஆக்கிவிடும். சொர்க்கத்தை உங்கள் காலடியில் காண்பீர்கள். என்று அந்த அழைப்பில் அவர் அன்புடனே கேட்டிருந்தார். வெறும் ஏட்டுச்சுரைக்காயாக அல்லாமல் காரியசாத்தியமாகக்கூடிய ஒரு செயல் திட்டமாகவே அந்த அழைப்பை அவர் சமர்ப்பித்திருந்தார் ஆனால் நம்மவர்களில் எத்தனைபேர் செவியில் அன்று இந்தத்தமிழ் சங்கநாதம்கேட்டதோ, தெற்கேயிருந்து ஓட்டமாக ஓடி வந்திருந்த நூறுபேரில்—ஆயிரம் பேரில் ஒருத்தராவது இந்தக் கிழக்கிலங்கை தமிழ்க் குரலுக்குச் செவி சாய்த்திருப்பார்களா என்பது சந்தேகமே வேறு ஏதாவது பற்றிய விண்ணப்பமோ அறிவித்தலோ ஆக இருந்திருப்பின் ஒரு புதிய அரசியல் கட்சி என்றோ அல்லது ஒரு புதிய தொழிற்சாலை என்றோ அல்லது கல்யாண மாப்பிள்ளை விவகாரம் பற்றி என்றேனும்கூட ஒரு சொல்—இனிய தமிழ்ச் சொல், ஆங்கு அந்த கவிதையின் அழைப்பினூடே அவர் தம் கண்ணில் பட்டிருக்குமேயானால் ஒரு வேளை சொல்லலாது. அது நிலைமையே இன்று எப்படி எப்படியெல்லாமோ ஆகிக் கங்கைக்கரை பெரும் ரகளைப் பட்டிருக்கும்.

கதை எழுதும் கதாசிரியர் (அவர் ஒரு தமிழாசிரியருங்கூடத்தான்) வெறும் ஏட்டுச்சுரைக்காய் பேர்வழியல்ல. பகல்கனவு காண்பவரல்ல. தனக்காக வாழுகிற வருமல்லர். அவர் எழுதும் பேனாவும் அதில் பொங்கிப் புரளும் தாய்மொழியும் அவரை வஞ்சிப்பதில்லை. சமுதாய உணர்ச்சி இனவாஞ்சை, மற்றெவர்க்கும் குறைவுபடாமலே அவருக்கும் உண்டு என்பதை நான் எழுதும் அதே தமிழின் பேரால் இங்கு சிறிது புலப்படுத்துவது என் கடமையாயிற்று.

என்ன செய்வேனடா தம்பி! தமிழச்சியை விட இன்னொருபெண் அழகாயிருக்கிறாள் என்று சொன்னால் அது எனக்கு மன சம்மதமாகவில்லையே.

பொங்கு தமிழுக்கு
இன்னல் நேர்ந்தால்
சங்காரம் நிசமென்று
சங்கே முழங்கு!
துடிதுடித்துப் போகிறேனே
இந்தச் சங்க முழக்கம்
கேட்டபோதெல்லாம்.

என்றாலும் நான் எழுத வந்த கதைக்கும் எப்பவோ யாரோ எழுதியகவிதைக்கும் தமிழ் முழக்கத்துக்கும் இத்தனை நீளமானதொரு முன்னுரை முகப்புப் பாயிரத்துக்கும் கடத்தான் தொடர்பு என்ன அவசியம். என்ன அதனால் ஆவது. என்ன என்று கேட்டால்-உண்டு உண்டு எல்லாமே உண்டு. சிறிதே பொறுமையைக் கைக்கொண்டு தொடர்ந்து வாசியுங்கள்! என்று நானும்தான்கேட்டுக் கொள்கிறேன். எழுதப் போகும் கதையில் யான் ஒரு போர்வீரன் அவதாரம் எடுக்கவேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது. கதை அமைப்பு. அந்தப் போர்

# அ. செ. மு.

வீரனே தன் கதையை போர்க்களம் சென்று பல்லாண்டுகளின்பின் கிராமத்துக்கு மீண்டது பற்றிய புதுமையான அநுபவத்தை பலவித்தைச் சுவை பொலியக் கூறுவதாக அதற்குமேல் 'உத்தாரணம்' ஆகியிருக்கிறது-எல்லாமே ஒரு நினைவும் கனவும். வாழ்க்கையே அது தானே. நினைவுகளில் வாழ்கிறோம், கனவுகளில் வாழ்கிறோம். நினைவிலும்கனவிலும் வாழ்கிறோம். ஆம், உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை... அநேகமாய் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகவேயிருக்கும், கிராமத்திலேயே நான் இல்லாமல் போய் இத்தனை நீண்ட காலத்தில் கிராமத்துக்கு வெகுதூரத்தே கடல் கடந்த நாடு தேசம் காடு வனாந்தரம் என்று பல்லாயிரம் மைல்தாண்டிப் போய் விட்டதனால் இந்த ஊரே அநேகமாய் என் நினைவில் மறைந்துபோனஒருதேய்ந்த கனவு ஆகிப்போயிருக்கிறது. இவ்விதமானதொரு நிலையில் பல ஆண்டுகளுக்குப் பிற்பாடு எனது கிராமத்துக்குத் திரும்பியிருக்கிறேன். ஊரிலே இன்றைக்கு எவ்வளவோ மாறுதல்கள் எத்தனையோ புதுமைகள்! அந்தப் பழைய நான் கிராமத்துக்கு என்ன நேர்ந்தது. எங்கே போய் ஒளிந்துவிட்டது! இந்தப் பனங்காட்டையுமா எதிரி விமானங்கள் தேடி வந்து இங்கெல்லாம் மூலை முடுக்குகள் தப்பாமல்குண்டு வீசி நாசம் விளைவித்தார்கள் என்று என்னையே கேட்டு எனக்குள்ளாக எண்ணியெண்ணி பெய்தியவனாக, பனந்தோப்புகளிலும் தோட்டம் துரவுகளினூடேயும் நுழைந்து அதனைத் தேடிப்பார்க்கிறேன்; துருவி ஆராய்ந்து பார்க்கிறேன். அப்படியும் பலனில்லை. என் இளமையின் கனவுகளிலே ஒளிர்ந்த அந்தப் பசுந்துளிர்க் கிராமத்தை எங்கேயும் காணேன். இராணுவத்தில் ச்சேர்ந்து போர்க்கோலம் பூண்டு சிங்களம் முதலாக இந்தியா, பர்மா, மலாயா, எகிப்துவரை சென்று முழங்கிய போர்வீரன்யாத்திரைக் கீதமும் துணிகரமான போர் முனை அநுபவங்களும் மகா பயங்கரமான சாக்காடும் மரண துன்பங்களும்... அமைதி துயிலும் இக்கிராமத்தில் என் வீட்டுக்கு முன் பக்க ஒழுங்கை ஓரமாக செழித்தோங்கி கிளைபரப்பி நிற்கும் மாமரத்தின் நிழலில் ஒரு சாய்வு நாற்காலியைத் தூக்கிப்போட்டுசாய்ந்திருந்து என்னையிட்டாக் கொடியேற்ற மனோதீசவத்துடனே இருபத்தைந்து நாட்கள் நடைபெறும் கோவில் திருவிழாவில் தினமும் கோவிலுக்குப் போய்ச் சேவித்து சுவாமியுடனே கூட வீதிவலம் வந்து திருவிழாப் பார்த்து கைநிறைய மடிநிறைய மிட்டாயும் கடலையும்பொம்மைகளும் வாங்கிப் போட்டுக்

(8ம் பக்கம் பார்க்க)

கரட் என்னும் மஞ்சள் முள்ளங்கி

# உயிர்ச் சத்துக்கள் நிறைந்த கிழங்கு

நீங்களோ அல்லது உங்களது குழந்தைகளோ அடிக்கடி நோய்வாய்ப்படுகிறீர்களா? உங்கள் குழந்தைகட்குக் காது, கண், மூக்கில் ஏதாவது தொற்று நோய் பிடிக்கிறதா? குழந்தைகள் வளர்ச்சி குன்றியிருக்கின்றார்களா? இவற்றுக்குக் காரணம் என்ன தெரியுமா? உடம்பில் நோயை எதிர்த்து நிற்கும் சக்திக்கும் (Immunity) இளம் குழந்தையின் உடம்பு வளர்ச்சிக்கும் தேவையான உயிர்ச்சத்து 'ஏ' இன்மையேதான் அதற்காக நீங்கள் மருந்துச் சாலைக்குச் சென்று மாத்திரைகளை வாங்கி விழுங்க வேண்டிய அவசியமில்லை. அவை செயற்கையாகச் செய்யப்பட்ட உயிர்ச்சத்துக்களே. அவற்றை நீங்கள் ஏன் இயற்கை முறையிற் பெறக்கூடாது. "கரட்" என்னும் மஞ்சள் முள்ளங்கியை பச்சையாகவோ அல்லது உணவின்மூலமோ பாவித்தால் உயிர்ச்சத்துக்களின் குறையை நிறைவாக்கலாம். மஞ்சள் முள்ளங்கி, கொத்தமல்லி, வல்லாரை, ஓமம், சீரகம், பெருங்காயச்செடி முதலிய தாவரங்களடங்கிய 'அம்பெல்லிப்பறி' (Umpelliferea) எனும் தாவர குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஐரோப்பிய மலைச்சாரல்களில் இருந்து இந்திய மலைச்சாரல்களில் குறிப்பாகக் காஷ்மீர் இமயமலைப்பகுதிகளில் விளைவிக்கப்பட்டது. இன்று இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் அதிக அளவில் பெறப்படுகின்றது. இந்த மஞ்சள்முள்ளங்கியில் உள்ள விசேஷம் என்னவெனில் தாவரங்களின் கருநீரகப் பொருட்களினால் Hydrotven உண்டாக்கப்படும் உயிர்ச்சத்து "ஏ" மற்ற எந்தத் தாவரத்திலும் இல்லாத அளவு இதில் அதிகமாக உண்டு. இதனாலேதான் மருத்துவ நிபுணர்கள் உயிர்ச்சத்து 'ஏ'க்கு 'கரோட்டீன்' என்ற பெயரை வைத்துள்ளார்கள். இதன் மூலம்தான் 'கரட்' கிழங்கு தனிச் சிறப்பாக விளங்குகின்றது.

## கரட்டின் சிறப்பு

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களை விருத்தி செய்யும் (Heamatinic) நரம்புக்குப் பலத்தைக் கொடுக்கும். (Aphrodisiac) இரத்த சுத்தி செய்யும். (Bload-Burifier) போசக்தியைக் கொடுக்கும். (Abbroldisisc நரம்புக்குப் பலத்தைக் கொடுக்கும். (Nervinetonic) [illegible] உண்டாக்கும்.

தினசரி உணவில் கரெட்டை எம்முறையில் உபயோகித்தாலும் உயிர்ச்சத்து 'ஏ' குறைவு நிறைவாகும். கரட் சாதாரண அளவு வெப்பத்தில் 'ஏ' சத்தை இழக்கமாட்டாது. ஆனால் கூடிய வெப்பத்தில் சமைத்தாலோ அன்றிப் பொரித்தாலோ சத்து இழக்கப்படும். எனவே பச்சையாகவோ அல்லது ஆவியில் அவித்தோ சாப்பிடுங்கள்.

## ஒரு அவுன்ஸ் கரட்டிலுள்ள சத்துக்கள்

உயிர்ச்சத்து 'ஏ' 568-1221 சர்வதேச அலகு (International Unit)
உயிர்ச்சத்து 'பி'1 Thiamine) 17
உயிர்ச்சத்து 'பி'2 Rilolavin) 6 மில்-கிராம்
உயிர்ச்சத்து சி 1 மில்-கி.
இரும்புச்சத்து 0,4 மில்-கி
பொஸ்பரஸ் (Phosphorous [illegible]
சுண்ணாம்புச்சத்து (Calcium) 23 மில்லி கிராம்
புரதம் (Protien) 0:3 மி.கி.
காபோஹைதரேற்று 3.0கி

அத்துடன் ஓர் குறிப்பிட்டளவு உயிர்ச்சத்து Dயும் இரத்தப்பெருக்கை நிற்பாட்டும் உயிர்ச்சத்து Kயும் இதில உண்டு.

உயிர்ச்சத்து A நிறைவை நிவர்த்திக்காக கொட்லிவர் ஒயில் சாப்பிட முடியாதவர்கள் கரட்டைச் சாப்பிடுவதால் அச்சத்துப் பெறப்படுகின்றது.

## சிறுநீரகச் சீர்கேட்டிற்கு

சிறுநீரகச் சீர்கேடு உள்ளவர்கள் கரட்சாறு 3 அவுன்ஸ் வீதம் காலை மாலை சாப்பிட்டால் சிறுநீரகம் சரியாகத் தொழில் செய்வதோடு நீரடைப்பையும், நீர்க்கடுப்பையும் நிவர்த்திப்பதோடு சிறுநீர்த் தெளிவின்மையையும் (Sediments) தீர்க்கும்

## மஞ்சட்காமாலை நீங்க...

மஞ்சட்காமாலைக்குக் கரட் கசாயம் மேற்கு நாடுகளில் சிறந்த மருந்தாகப் பாவிக்கப்படுகின்றது. மஞ்சட்காமாலையுடைய நோயாளிக்கு இதன் கசாயம் தொடர்ந்து கொடுத்ததின்பேரில் மற்றெல்லா மருந்துகளையும்விட இது சிறந்த பலனைக் கொடுத்ததாக எமக்கு தெரியவந்துள்ளது. அத்துடன் இரத்த சுத்தி இல்லாத ஒரு நோயாளிக்கு இதை வேறு ரூபத்தில் கொடுத்தபோது சிறுநீரகங்களைத் தூண்டி இரத்தத்தைச் சுத்தப்படுத்தியுள்ளது.

## குடல்வாதை குறைய

[illegible] குறைக்கவும் நீண்ட [illegible] குறைக்கவும் இதை உணவாகத் தொடர்ந்து உபயோகியுங்கள்

## பெண்கள் விரும்பி உண்ணலாம்

சுமார் பத்தொன்பது வயதினையுடைய பெண் பூப்படையாமல் "பிறைமற்றியோறியா" இருக்கும் போது இக்கரட்மூலம் தயாரிக்கப்பட்ட மருந்து தொடர்ந்து கொடுத்ததன் மூலம் அவளுக்கு இருந்த இரத்தச்சோகை நோய் தீர்ந்தவுடன், அவளின் உடம்பில் இரத்த சிவப்பு அணுக்களை விருத்தி செய்யும் தன்மை கூடியது. இதனால் அவள் நரம்பில் பெலம் பூப்படைந்ததாக அறியமுடிகின்றது.

உடம்பில் வனவளப்பையும் முகத்தில் தெளிவையும் வசீகரத்தையும் ஏற்படுத்த கரட் கிழங்கு நல்ல ஒளஷதமாகும். வளரும் குழந்தைகட்கு உடல் வளர்ச்சியைக் கொடுக்கும். சுமார் ஐம்பது வயதுடைய ஒரு ஆணுக்கு இரத்தக் குறையும் நரம்புப் பெலயீனமும் இருந்ததாக அறிந்து அதற்குக் கரட்கிழங்கில் இருந்து செய்யப்பட்ட ஒரு மருந்தின் மூலமும் அதே கிழங்கைத் துருவித் தூளாக எடுத்துக் கோதுமைமாக் கலந்து செய்யப்பட்ட ரொட்டி சாப்பிட்டதாலும் அவருக்குப் பூரண பலமும் நரம்புப்பலமும் பெற்றதாக அறிந்துள்ளோம். எனவே நீங்களும் குறைவையும், நிறைவையும்பெற இக்கரட் கிழங்கைத் தினசரி உணவில் உபயோகித்துக்கொள்ளுங்கள்.

— 'பெனறிஸ்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கப் பொன்மயிலாள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு பெரியவர்கள் பின்னால் விழாவிமரிசையும் வேடிக்கையும் சனசந்தடியும் மெல்ல ஒய்ந்து அடங்கும் சூன்யமானது வேதனையும் சாந்தியும் கலந்த ஒரு நினைவுணர்வாக நெஞ்சத்தைத் தாக்க, தொங்கிய தலையாக வீடுநோக்கிநடந்த அந்தச் சிறுபிள்ளைப் பராயமே நினைவில் மீள்கிறது.

வாழ்க்கையே ஒரு களம். பெரும்போர்க்களம், அதிலே நாமெல்லோருமே போர் வீரர்கள். நம்மொவ்வொருவருக்கும் முன்னால் மாவாத போராட்டமும் ஓயாத சமராட்டமுமாகத்தானே தினமும் பொழுதுவிடிகிறது.

என் கூட ஒரு வகுப்பில் படித்த வெற்றிவேலு இதற்குள்ளாகப் படித்து சோதனைகள் சித்தியடைந்து அரசாங்க சேவையில் சேர்ந்து உத்தியோகம் பார்த்துக் கல்யாணம்முடித்துநாலைந்துபிள்ளைகளுக்குத் தகப்பனாகி யிருப்பதுடன் உத்தியோகத்திலிருந்து ஒய்வுபெற்றும் வந்துவிட்டானும்.

ஒருவாரம் ஆகியிருக்கும். தெருப்படலை தாண்டாமல் வீட்டுக்குள்ளிருந்தே ஊர்ப்புதினங்கள் யாவும் என் தாய்க் கிழவியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். பழைய தலைமுறை ஒன்று மறைந்து யுத்தகாலத்திருப்பத்துடனே கோதுமைக்கப் பல்கொடி போட்டுக் கொண்டு புதிய தலைமுறைக் கிராமத்திலே வளர்ந்து உருவாகிக் கொண்டிருக்கிறது. வீடுவந்து சேர்ந்ததே இரவோடிரவாக. ரயில்நிலையத்துக்கு வீட்டிலிருந்து ஒருத்தன்வந்து காத்துநின்று நேரே வீட்டில் கொணர்ந்து சேர்ப்பித்துவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டான். அவன் எங்கள் குடும்பத்தில் ஒரு புதுவரவாம். அடேயப்பா, என்னமாக வளர்ந்திருக்கிறான். நான் நின்றபடியே தொங்கிப் பாய்ந்தாலன்றி என் கைகளுக்கு அவன் செவிஎட்டாது. ஒருவாரம் மட்டில் இவ்விதமாக வீட்டுக்குள்ளேயும் வீட்டுத்தோட்டத்துமாமரத்தடியில் ஒரு சாய்வு நாற்காலியிலுமாகப் பொழுதுக்குப் போக்குகாட்டி நாட்களை எண்ணிக்கொண்டிருந்தேன். ஊர்மனை, தெருச்சந்தி அந்தப் பழையநாவி ஒழுங்கை முடக்கு, கடைகள் சந்தை- எல்லாம் இன்றைக்கு எப்படி என்ன கோலத்தில் இருக்கிறதோ!


ஒருதினம் தெருவாசலில் போய்நின்று வெளியே தலையை நீட்டிஎட்டிப்பார்த்தேன். வெயில் கண்ணைக் கூசுகிறது. இரண்டுபக்கத்திலும் ஒன்றுமே தெளிவாகத் தெரியவில்லை. பழைய நாளில் மலையாளி கோவிந்த நாயர் தேநீர், தோசை. வடை வியாபாரம் நடத்திய கொட்டில் பெரியகட்டிடமாக எழுந்திருக்கிறது இது தானா, கோவிந்த நாயர் அன்றைக்கெல்லாம் கடச்சுட சுவை சொட்ட காலையும் மாலையும் சுட்டு அடுக்கிய தோசை, வடையாக இன்னமும் இது நாள்வரை சுட்டு அடுக்கியிருந்தால் ... அக்கம்பக்கத்திலிருந்த நிலத்தையும் சேர்த்து அந்தக் கொட்டில் கடையை அப்படியே விலைக்குவாங்கி, அங்கெல்லாம் இம்மட்டில் மாடிக் கட்டடமே எழுந்திருக்குமே'

இரண்டுசுண்டு மைசூர்ப் பருப்பு. வெங்காயம். கொச்சிமிளகாய் இவ்வளவு தான் மூலப்பொருள். எல்லோரும் பார்த்திருக்கக்கூடிய பதார்த்தான் கோவிந்தர் எதிர்க்காற்போலுள்ள வாடிக்கைக் கடையிலே இவைகளை தினமும் காலையில் வாங்கிக் கொண்டு போவார். மூன்று மணிக் காலத்தில் பூரண சந்திரன் அளவினதாகப் பெரியவடைகள் அடுப்பில் கொதிக்கும். எண்ணெச் சட்டிக்குள்ளே புரண்டடித்து செக்கச் செவேலெனப் பொரிந்து நாவில் ஜலம்ஊற கமகம வென மணக்கும் ரொட்டி மாதிரி மெல்லிசாக இருக்கும். வடையிலே அது ஒரு ஸ்பெஷல் — அதற்குப்பெரிய வடை என்றும் காரவடை என்றும் இரண்டு விதமாகப் பெயர்சொல்லி மூன்று சதம் கொடுத்து வாங்கி முறுமுறு என்று ஓசைஎழ மென்று தின்பார்கள். அதற்கு அளவில் மிகச்சிறியதான மசாலவடை உளுந்துவடை என்பவை எல்லாம் சதக்காசுக்கு விலைபோகும். நான்சொல்வதெல்லாம் யுத்தகாலத்துக்கு முந்திய விலைவாசிகள்— மறந்திடாதேங்கோ! லட்டு ... ... லட்டு! ஒருகைக்குண்டு (பயப்படாதேங்கோ) அளவு உருண்டை. விலை இருபத்தைந்துசதம். லட்டின் விலையைக் கேட்டுச் சற்றே தயங்கிநிற்கும் கிராமத்தவர்களிடம் அதன் உள்ளடக்கத்தை மிக இனிப்பாக எடுத்தியம்புவார் நாயர். இந்த ஆளைாளாச்சியறியசத்திய விசுவாசமாக உங்கள் முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறேன் சுத்தமான கற்கண்டு லட்டுஇது' என்று வாய்கூசாமல் சத்தியம் கூடச் செய்வார் நாயர் பொய்சொல்லவில்லை; இரண்டுருக்குத் சீனி கலந்த கடலைப்பருப்பு மாவில ஒர் அவுன்ஸ் கற்கண்டுக்கட்டியைப் பொடி பண்ணிப் போட்டிருப்பது என்னவோ தெய்வசாட்சியான மெய். அதுபோல அந்த அளவினதாக உண்மையும் இங்கு அவர் பேச்சில் கலந்திருக்கிறதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். கற்கண்டோ உப்போ அது மண்ணாங்கட்டியோ கோவிந்தநாயர் கைபட்டாலே பட்சணம் மதுரமாகத் தித்திக்கும்.

'எட, பேய்ப் பொடியா வாடகைக்காக வாடகைக் காசுஎன்று காசைக்கொண்டு வந்து வைத்துக்கொண்டு உயிரை விடுகிறுயே. உனக்கு இந்தக்காணியைஉன் பெயருக்கே எழுதித் தரட்டோசொல். உன்ரசீவிய காலம் முழுக்க என்னுடைய இந்த நிழலில் அச்சமற்ற சீவியம் உனக்கு—' காணிக்காரர் கணபதிப்பிள்ளை கோவிந்தநாயரைப் பார்த்து மனம் திறந்து நெஞ்சம் நெகிழ்ந்து சொல்லிவிடுவார். அன்று முதலாக கோவிந்தநாயர் மறுபடி எப்பொழுதாவது தாய்நாட்டுக்கு கப்பல்ஏறும்வரைகணபதிப்பிள்ளையார்தான்கோவிந்தநாயருக்குக் காவலன் எசமான், முதலாளி ... எல்லாமே, ஏன் அச்சனும் அம்மையும் கூடத்தான்.

(9ம் பக்கம் பார்க்க)


ஆரம்ப வாழ்வு ஆரோக்கிய வாழ்வாவது முக்கியம்




இன்றைய குழந்தைகளுக்காக விசேஷமாகத் தயாரிக்கப்படுவதும் முக்கியமாக உஷ்ணப் பிரதேசங்களில் வசழும் குழந்தைகளுக்காக தயாரிக்கப்படும் நவின பாலுணவுதான் பெலார்கன் நன்கு சமன் படுத்தப்பட்டது, ஜீரணிக்கக் கூடியது. அதிகப்படியான வைடமின்கள் கொண்டதுமான பெலார்கன் குழந்தைக்கு முக்கியமான ஆரோக்கிய வாழ்வை ஆரம்பத்திலேயே கொடுக்கும். பிறந்த நாள் முதல் திடமாகவும் ஆரோக்கியமாகவும் வளர உதவுவதுடன் குழந்தைக்கு தொற்று நோய் பிடிக்காமலும் பாதுகாக்கிறது பெலார்கன். அதனுல்தான் பெலார்கன் தாய்ப்பாலுக்கு அடுத்தபடியாக விளங்குகிறது.

## பெலார்கன்

NESTLÉ

ஆரோக்கியமான குழந்தைகளை மேலும் ஆரோக்கியமாக்குகிறது.

ZENITH




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணிக்கம் ...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏது, மலையான பாவதி என்னையும்கூட இத்தனை நீளம் எழுதும்படி வசப்படுத்திவிட்டதே!

அந்த கோவிந்தநாயரின் இறக்கெல்லாம் நிச்சயமாக இந்த ஊரில் இருக்கமாட்டார். அதனை யாரும் சொல்லாமலே என்னால் தெரிந்து கொள்ளமுடியும். ஆகலால் அவர்பேச்சை இம்மட்டில் விட்டுவிடலாம். என்றாலும் ஒருக்கால் அந்தப் பக்கம் போய்த்தான் பார்ப்போமே என்று எண்ணியவனாய் மெல்லத்தெருவில் அடியெடுத்து வைத்து அந்தப்புதிய கட்டிடம்நோக்கி நடந்தேன்.

(அடுத்தவாரம் தொடரும்)

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கல்வி ஸ்தாபனத்தைப் பொறுப்பேற்று நடத்த வதற்கு நடுத்தர வயதுடைய யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஆண் அல்லது பெண் உடனடியாகத் தேவை. கல்வி தகைமைகள், வேலை அனுபவம் பற்றிய நற்சான்றிதழ்களுடன் முழு நேரம் அல்லது பகுதி நேர வேலைக்கு எதிர்பார்க்கும் சம்பளம் குறிப்பிட்டு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர், 30, காலி வீதி, கொழும்பு 6. 3104

## விற்பனைக்கு

A 40 வான் C V தொடர் என் நல்ல நிலைமையில் உள்ளது. எந்நேரத்திலும் பார்வையிடலாம். விஜயாஸ் சோப், மூளாய், எழுதுமட்டுவாள். 3108

ஆடுகள்:

15 ஆடுகள் பல அளவுகளில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும். விவேகானந்தன், தெணியம்மை ரோட், வல்வெட்டித்துறை. 3109

காணி:

நல்லூர் கந்தசுவாமிகோவிலுக்கும் இந்துமகளிர் கல்லூரிக்கும் அண்மையிலும், பஸ் பிரயாண வசதியும் உள்ள அம்மன் ரோட்டில் (கந்தர் மடம்) வீடுகட்ட சதுரமான 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 20/A, அம்மன் ரோட்டு யாழ்ப்பாணம். 2788

கார்

5ஸ்ரீ என்ணயிரம் தொடர்பிலக்கம். ஒஸ்டின் கேம்பிரிட்ஜ் (Austin Cambridge) உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும், விளம்பர இல. 3107 C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 3107

## தேவை

மருதனாமடம் சந்தி-(பெற்றோல்செட் முன்னால்) புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் கணேசபவான் ஒட்டலுக்கு கசியர் - டீமேக்கர் குசினி வேலைக்காரர் பரிமாறுபவர்கள் தேவை. விரும்புவோர் 25-5-71 திகதிக்கு முன் நேரில் சமுகம் தருக. கசியர், பிணைப்பணம் செலுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும். 3102

## பயிற்சி

ஆர்மச்சர், மோட்டர், றீவைண்டிங் தமிழில்பயிற்சி அளிக்கப்படும். விபரங்களுக்கு இன்டஸ்றியல் கிராப்ட்ஸ் இன்ஸ்றிரியூட், 443/5. கே.கே.எஸ்.வீதி, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். 3110

## விற்பனைக்கு

புதுமைலோலன் எழுதிய குறுநாவல், "கருகிய ரோஜா" இரண்டாம் பதிப்பு விற்பனையாகின்றது. விலை 50 சதம் மட்டுமே. 50 சத தபாற்தலையனுப்பினால் அனுப்பும் செலவு இலவசமாகும். அன்பு புத்தகசாலை, 27 டி, பெரியகடை, யாழ்ப்பாணம். 3111

# காளிதாசன் கண்ட கோடை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டாது பகை மறைந்து நிற்கிறது. அன்பு மட்டுமல்ல. வெய்யிலின் கொடுமையும் சமரசத்தை ஏற்படுத்துமோ?

இன்னொரு பக்கலில், தொண்டை உலர்ந்த யானைகளும் அரிமாவைக் கண்டு அஞ்சாது செல்கின்றன. நீர் வற்றி விட்டால் என்ன உலராத சேறு உளதே என்று சொல்வது போலக் குளத்தை நோக்கி விரைகின்றன. அங்கு இன்னமும் நீர் இருக்கிறதே. ஆன மகிழ்ச்சி மேலீட்டால் அக்குளத்தைக் கலக்கவே அங்குள்ள தாமரைக்கொடிகள் சிதைகின்றன. நீர்ப்பறவைகள் நாலாபக்கமும் சிதறியோடுகின்றன.

இலை உதிர்ந்த மரங்களிடையே புள்ளினங்கள் ஒதுங்கி வானைப்பார்த்து இளைக்கின்றன. வெப்பத்தினின்றும் தம்மைக் காத்துக் கொள்ள குரங்குக் குலம் மலைக்குகைகளை நோக்கி ஓடுகின்றன. நீரை நச்சிய கவயக் கூட்டம் (ஓர்வகைப் பசுவினம்) இங்குமங்குமலைகின்றன. இதைக் காலஞ்சென்ற பாடசாலைப் பரிசோதகர், முகாந்திரம் ஸ்ரீசதாசிவையர் மூலத்தின் சுவை கெடாதவாறு தெள்ளிய தமிழில் சொல்வதைப் பாருங்கள்.

பச்சிலைகளற்ற
பாதபத்திலைக்கும்
புள்ளினம்
உச்சிமா மலைக்
குகைக்குளோடு
மார்க்கடக்குலம்
நச்சிநீர் குடிக்க
வெங்குநாடியோடுங்
கவயமா
குச்சிதமிக் சரவநீருகப
நீர் குடிக்குமால்'

எங்கள் கிராமம்

அராலி

"ஈழநாடு" வாரமலரில் வெளிவந்து கொண்டிருந்த எங்கள் கிராமம் தொடர் அம்சம் எதிர்பாராத சில காரணங்களால் கடந்த சில வாரங்களாக வெளிவர முடியாது போய்விட்டது.

24—5—71
திங்கட்கிழமை
வாரமலரில்

அராலி

கிராமம் பற்றி
திரு. வெ. சு. நடராசா
எழுதுகிறார்.

# ஊரடங்கும் வேளையிலே

"குருநகர் ச. தங்கராஜா"

காவல் வீரர் காரில் ஏறி
கடமை செய்ய வருகிறார்,
ஆகல் உள்ளம் உதிரத் தன்ன
தலைகள் எங்கும் நீளுது!

ரோட்டில் காக்கி உடையைக் காண
பூட்டுத்தானே பூட்டுது
வோட்டும் சூட்டும போட்ட போதும்
கோணி ஓட நேருது!

காவற் படையின் கட்டமை காண
கலக்கம் வந்துசேருது
தாவற் கரிய மதிலை யெலாம்
தாவிச் செல்ல நேருது

ஏழுமணி ஏலே என்று
ஏங்கி நெஞ்சு வாடுது
நாமும் ஈதோசுதோ வென்று
நலிந்து கன்றிச் சோருது!

கள்ளுக் கொட்டில் களை இழந்து
கதவு கட்டித் தூங்குது
துள்ளக் கூடத் துணைவிழந்து
துஷ்டரி தூக்கம் செய்கிறார்

வெறுமையான வீதி எண்ணி
ஏங்கும் நெஞ்சம் எத்தனை!
பொறுமையான வாழ்வின் இன்பம்
தேக்கு முள்ளம் எத்தனை!

பாரில் மக்கள் பகை அகல
படை பவனி செல்லுது
ஊரில் எல்லாம் அடங்கும்போது
உவகை தன்னில் பொங்குது

# சிறுகதை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தலானாள். என் இருதயம் நின்றுவிடும் போலிருந்தது.

என்மனைவி உயிர்வாழ்ந்திருந்தால் வயதிலும் உருவிலும் எப்படி இருந்திருப்பாளோ அதே உருவம்!

(அடுத்த வாரம்முடியும்)

இன்று மட்டும்
RAJAH - JAFFNA
Daily
10-00a.m. 1-30&4-00p.m.
Eli Wallach,
Terrence Hill
in
ACE HIGH
(Color - From Paramount)

ஸ்ரீ காலிங்கன்
[illegible]
தினசரி
காலை10-30, பி.ப.1-30
ஜெமினி — சௌகார்ஜானகி
நடித்த
இரு கோடுகள்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Erig Porter
in
THE LOST CONTINENT
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி
நடித்த
சபாஷ் தம்பி

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி காலை 10-30,
பி. ப. 2-30
ஜெமினி - ஜெய்சங்கர்
நடித்த
பூவா தலையா

றீகல் இப்பொழுது நடைபெறுகிறது
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00
ராஜ்கபூர்—ராஜ் ஸ்ரீ — மொகமூத்
AROUND THE WORLD
(ஹிந்தி) டெக்னிக்கலர்
இசை சங்கர் ஜெய்கிஷன்
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய படம்

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப.2-00
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

மகத்தான 51-வது தினம்
கடைசிவாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி
காலை 10-30
பி. ப 2-00
மாஸ்டர் பிரபாகர்
பேபி சுமதி - [illegible]
நடித்த
வா ராஜா வா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி.ப.1-30
எம்.ஜி.ஆர்.
சரோஜாதேவி
நம்பியார்—நாகேஷ்
மனோரமா மற்றும் பலர்
நடித்த
படகோட்டி
(சுவர்ணக்கலர் சித்திரம்)
டைரக்ஷன்
T. பிரகாஸ்ராவ்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
கை கொடுத்த
தெய்வம்

லிங்கஸி
காலை 10, பி.ப.2-00 மணி
தில்லானா
மோகனாம்பாள்

ஹைலன்
காலை 10, பி.ப 2-00 மணி
எதிரிகள் ஜாக்கிரதை

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
முன்றெழுத்து
(கலர்ச் சித்திரம்)

வெல்லி சினிமா
[illegible]
தினசரி
காலை10-30, பி. ப. 2-30
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திருமலை சர்வதேசத் துறைமுகமாகும்!

## அடுத்த ஆண்டுக்குள் வேலை முடியும்

கொழும்பு, ஞாயிறு

திருகோணமலைத் துறைமுக அபிவிருத்தி வேலைக்கான வெளிநாட்டுச் செலாவணியின் ஒரு பகுதியை இலங்கை அரசாங்கத்துக்கு கொடுத்துதவ ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. இந்த உதவியுடன் திருகோணமலைத் துறைமுகம் சர்வதேச துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலைத் துறைமுகத்தை கட்டுப்பாடற்ற சர்வதேச துறைமுகமாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என்று உகிலாச வர்த்தக, கப்பற்துறை அமைச்சர் அரசாங்கத்திடம் கேட்டிருந்ததை, அரசாங்கம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி சம்பந்தமான இரண்டாவது பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஆசிய அபிவிருத்திவங்கியின் உயர் அதிகாரி ஒருவர் இலங்கைக்கு விரைவில் வரவிருக்கிறார்.

தற்போது கொழும்புத் துறைமுகத்தில் மட்டும் நடைபெற்றுவரும் எண்ணெய் பொருள் ஏற்றுமதி இறக்குமதியை, வருகிற ஆண்டில் திருகோணமலைத் துறைமுகத்திலும் ஆரம்பிக்க விரும்புவதாக இலங்கை அரசாங்கம் சகல சர்வதேச கப்பற் கம்பனிகளுக்கும் அறிவித்துள்ளது.

# களனி ஆற்றில் 100 சடலங்கள்?

## செனட்டில் விஜயமானே

கோட்டை, ஞாயிறு

களனி ஆற்றில் நூற்றுக்கு மேற்பட்ட சடலங்கள் மிதந்ததாக செய்திகள் பரவலாக அடிபட்டன என்று எதிர்க்கட்சித் தலைவரான செனட்டர் விஜயமானே செனட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், உள்ளூராட்சி உள்நாட்டமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, ஆக மூன்று சடலங்களே களனி ஆற்றில் மிதந்ததாகத் தெரிவித்துள்ளார். இதே வேளையில் செனட்சபை உபதலைவர் செனட்டர் எஸ். ஆர். எஸ். சோமரத்தினு களனி ஆற்றில் எட்டுக்கு மேற்பட்ட சடலங்கள் காணப்பட்டதாக கூறியுள்ளார் என்று குறிப்பிட்டார்.

### பதில் அதிபர்

தாவடி, ஞாயிறு

கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. க. கந்தசாமி இம்மாதத்திலிருந்து ஓய்வுபெற்றதையிட்டு தற்காலிக பதில் அதிபராக திரு சி. குணபாலசிங்கம் கடமையாற்றிவருகிறார்.

### அட்டோர்னி ஜெனரலை விசாரணை செய்யக் கோரிக்கை

வாஷிங்டன், மே. 16

அமெரிக்க காங்கிரஸ் (சட்டசபை) உறுப்பினர் திருமதி பெல்லா அப்சுக் அட்டோர்னி ஜெனரல் ஜோன் மிட்சுலே விசாரணை செய்யவேண்டுமென்று மக்கள் பிரதிநிதிகள் சபை நீதி கமிட்டியிடம் கோரியுள்ளார்.

கடந்தவாரம் வாஷிங்டனில் நடைபெற்ற போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆயிரக்கணக்கானோர் அட்டோர்னி ஜெனரலின் கட்டளைக்கிணங்கவே கைதுசெய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை நாஜிகள் கைதுசெய்து சித்திரவதைக் கூடங்களில் தள்ளியதையே இது ஞாபகப்படுத்துகிறதென்று திருமதி பெல்லா அப்சுக் கூறினார். இது அமெரிக்க அரசியல் பட்டம் உத்தரவாதம் செய்யும் பிரஜைகளின் உரிமைகளை மீறுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கூ. மொ. வி யிடம் வெங்காய விநியோகம்

அரியாலை, ஞாயிறு

நாடு பூராவும் சின்ன வெங்காயம் விநியோகிப்பதை கூ. மொ. வி ஸ்தாபனம் மேற்கொண்டுள்ளதாக விஷயமறிந்த வட்டாரத்திலிருந்து தெரியவருகிறது. பயங்கரவாதிகளின் வன்செயலினால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதையடுத்து வடபகுதியில் தேங்கிக் கிடந்த சின்னவெங்காயம் இனி விரைவில் நாடு பூராவும் தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

நல்லூர் எம். பி. திரு. ஸி. அருளம்பலம் காணி விவசாய அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் சின்னவெங்காயத்தின் உத்தரவாதவிலையை அதிகரிக்க வேண்டும் என்றும் இதன் மூலம் வெங்காய உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுமென்றும் மிளகாய் உற்பத்திக்கு வழங்கப்படும் ஊக்கம் சின்னவெங்காயத்திற்கு வழங்கப்படவில்லை என்றும் சின்னவெங்காயத்திற்கு தற்பொழுது உள்ள உத்தரவாதவிலை போதாது என்றும் தெரிவித்துள்ளார்.

உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்தை எவ்வித தாமதமுமின்றி எல்லாவற்றையும் அரசாங்கம் கொள்வனவு செய்ய வேண்டும்" என்ற தீர்மானம் ஒன்றை நல்லூர் இளைஞர் சங்கம் நேற்றுமுன்தினம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது.

பயங்கரவாதிகள் பற்றி

# முழுத் தகவல்களையும் தெரிவிப்பது உகந்ததல்ல

— செனட்டர் நடேசன்

கோட்டை, ஞாயிறு

நாட்டின் தற்போதைய பாதுகாப்பை ஒட்டி பயங்கரவாதிகள் பற்றிய முழுத் தகவல்களையும் வெளியிடுவது உகந்ததல்ல என்று நேற்று செனட்சபையில் சிம்மாசனப் பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் செனட்டர் நடேசன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் நாட்டின் பாதுகாப்பைக் கருதி உரியநேரத்தில் ஜனநாயகமுறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைத் தடுப்புக்காவலில் வைத்ததைக்கு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்த திரு. நடேசன் தற்போது நாட்டில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்களுக்கு நாடு சுதந்திரம் பெற்றபின் அமைக்கப்பட்ட அரசாங்கங்கள் யாவும் பொறுப்பேற்கவேண்டுமென்று கூறினார்.

### சிரமதானம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தின் பல ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவேண்டிய முன் மண்டபத்தை அடியார்கள் சிரமதானம் மூலம் செய்து முடித்துள்ளனர். ஆலயத்தின் மற்றும் பல புனரமைப்பு வேலைகளும் சிரமதானம் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

# இந்துசமுத்திரத்தில் மேலும் ஒரு ராணுவத்தளமா?

மாஸ்கோ, மே 16

இந்துமகா சமுத்திரத்தின் ஆபிரிக்கக் கரையில் விமானகடற்படைத்தளங்களை நிர்மாணிக்கும்திட்டமொன்றை அமெரிக்கா ஆராய்ந்துவருகிறதாம்.

இத்தகவலை 'சோவெட்ஸ்கயா ரொஸ்ஸியா' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

பிரிட்டனுக்கு சொந்தமான டியகோ கார்ஷியாவில் அமெரிக்க இராணுவத்தளம் நிறுவப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே. இது மொஸாம்பிக்கின்வடபிராந்தியத்தில் நிறுவப்படவிருக்கிறது.

இந்துமகா சமுத்திரத்தில் அமெரிக்காவின் நாட்டம் அதிகரித்துவருவதை இது கோடிட்டுக்காட்டுவதாக உள்ளது. இதனால் இப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் அரசியல் பொருளாதார ராணுவ ஆதிக்கம் அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது.

போர்த்துக்கலின் ஆட்சியிலுள்ள மொஸாம்பிக்கில் கடந்த பல ஆண்டுகளாக விடுதலைப் போராட்டம் நடைபெற்றுவருகிறது. அமெரிக்கா நிர்மாணிக்கவிருக்கும் ராணுவத்தளம் ஆபிரிக்க விடுதலை இயக்கத்தைப் பலஹீனப்படுத்தும். அத்துடன் இந்துமகாசமுத்திரத்தைச் சூழ்ந்துள்ள ஆசிய ஆபிரிக்க நாடுகளின் நலன்களைப் பாதிக்கும் என்றும் பத்திரிகை கூறுகிறது.

பயங்கரவாதிகள்

# பொது மக்களை சித்திரவதை செய்து கொலை செய்கிறார்கள்

கோட்டை ஞாயிறு

கம்பிட்டிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை கைக்குண்டுமூலம் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் ஒரு பயங்கரவாதியை இராணுவப் படையினர் கைதுசெய்து காவல்பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். காலியில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டவர்களுள் இவரும் ஒருவர்.

தெற்கில் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் தீவிரமாக நடைபெற்றபோது இந்த பொலிஸ் சார்ஜன்ட் தாக்குதலுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது தலையணையில் இனம் தெரியாதவர் களால் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததினால் கொல்லப்பட்டார்.

குருநாகலை மாவட்டத்தில் குருகமுவ என்னுமிடத்தைச் சேர்ந்த கனேகொட என்றவிடத்தில் பயங்கரவாதிகள் பல கிராமவாசிகளை சித்திரவதை செய்து கொலை செய்துள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது. கனேகொட கிராம சேவையாளர் திரு. பீ. எஸ். வேரஹெர பாடசாலை ஆசிரியர் திரு. கே. பி. ஹேரத் உட்பட 4 பேரின் சடலங்கள் இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட நிலையில் இவர்கள் இறந்து கிடந்ததாகக் கூறப்பட்டது.

பயங்கரவாதிகளின் தலைவர்களில் ஒருவனான தேமிஸ் என்றழைக்கப்படும் அத்துலா என்பவரை மட்டுவல்கல என்னுமிடத்தைச் சேர்ந்த கிராம வாசிகள் கைது செய்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். தானும் தமது சகாக்கள் 125 பேரும் கைது செய்யப்பட்ட தினம் சிங்கராஜ காட்டிற்குள் நுழைய முயற்சித்ததாகவும் அதற்கிடையில் கிராமவாசிகளிடம் தாம் சிக்கிக் கொண்டதாகவும் அத்துலா பொலிசாரிடம் தெரிவித்துள்ளான்.

ஹினிதும் பத்துவையில் உள்ள அபராகடை, யடபொத ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அப்பகுதி காடுகளுக்குள் பதுக்கிவைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்களைப் பொலிசாரிடம் கொடுத்துள்ளனர்.

## வர்த்தக விடுமுறை ரத்து

கோட்டை, ஞாயிறு

விசேஷ வர்த்தகவிடுமுறை தினங்களையும் அரசாங்கம் ரத்துச்செய்துள்ளது. இவ்வருடத்தில் உள்ள அரசாங்க வங்கி விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அரசாங்க வங்கிவிடுமுறைகளுடன் வர்த்தக விடுமுறையும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மகாதேசாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள விசேஷ வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேமாதம் 13-ந் திகதி (அரைநாள்), மே மாதம் 19-ம் திகதி (முழுநாள்), அக்டோபர் 7-ந் திகதி (அரைநாள்) ஆகிய தினங்களே வர்த்தக விடுமுறை தினங்களாக முன்னர் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.

## நாவலர் மண்டபத்தில் தேவார வகுப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

வைகாசி விசாக தினத்தன்று நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தேவாரப் பண்ணிசை வகுப்பு ஆரம்பிக்கப்பெறவிருக்கிறது மெய்கண்டாராதீன ஓதுவார் பண்ணிசை வேந்தர் திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரனால் நடாத்தப்படவிருக்கும் இத்தேவார வகுப்புக்கான பிரவேசப் பரீட்சை ஜூன் மாதம் முதல் திகதி நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறதாம்.

## வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்

கம்பளை, ஞாயிறு

'அரசாங்கம் தேர்தலின் போது மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் கட்டாயம் நிறைவேற்றியே தீரும். ஆனால் இவற்றை அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றிவிட முடியாது' என்று உடுநுவர ஆட்சி மன்ற அங்கத்தவர் திரு. ரி. பி. ஜயசுந்தர இத்தொகுதியில் கட்டுறவு மொத்த விற்பனை நிலையமொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பிரவுண் ரோட்டில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மே மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org